123
3 - MAR
2626
JL
-:5mวบ1,M25vL
M39.1.4.
210170.

உ

# வைத்திய சந்திரிகா

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி ஆங்கிலமாதம் முதல் வாரத்தில் வெளிவரும்.

Vol. 1. March 1939. No. 4.

## விஷய சூசிகை.


| | | பக்கம். |
|---|---|---|
| க்ஷயரோகமும் அதன் சிகித்சையும் | பத்திராதிபர் ... | 21–48 |
| ஔஷத சாரம் | பண்டிட் நாராயணய்யங்கார் ... | 16–19 |
| வைத்தியச் செய்திகள் | -காரியதரிசி ... | |
| | சுதேச வைத்திய சபை | 49 |



| சந்தா விகிதம். | விளம்பர விகிதம். |
|---|---|
| வருஷ சந்தா:— | மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8 |
| உள் நாட்டுக்கு ரூ. 2 | ,, ,, ½-க்கு ரூ 4 |
| வெளிநாட்டுக்கு ரூ. 3 | ,, ,, ¼-க்கு ரூ 2 |

Pandit, S. NARAYANA IYENGAR.
Editor and Publisher.

[விலை 0—3—0

...ர் பிரஸ், காக்காத்தோப்புத்தெரு, மதுரை-39.

## T. S. N. ரண நிவாரிணி என்னும் களிம்பு.

மேற்படி களிம்பு எல்லாவித வெட்டுக்காயங்கள், அடிபட்ட காயங்கள், வேனற்கட்டி, ரத்தக்கட்டி, முகப்பரு, சொறி, சிரங்கு, கரப்பான், மேகவிரணம், அக்கி, மேகப்படை, எச்சிற்தழும்பு, மூலமுளைகள், நெருப்புக் காயங்கள் முதலிய தோலில் வரும் சகல வியாதிகளுக்கும் மேலுக்கு உபயோகிக்கப்படும் ஓர் அத்யற்புத மான களிம்பு. இதை ஷை வியாதிகளில் மேலுக்குத் தடவினால் எரிச்சல் முதலிய ஒருவித தொந்திரவுமின்றி மிகவிரைவில் குணப் படுத்து மென்பது திண்ணம். பலர் இதை உபயோகித்து நல்ல பலன் அடைந்திருக்கின்றனர்.

**சிறிய பாட்டில் விலை அணா 5.** **பெரிய பாட்டில் விலை அணா 9.**

தபாற் சிலவு வகையரா பிரத்யேகம்.

---

## T. S. N. கர்ணபிந்து அல்லது காதுதைலம்.

இந்தத்தைலம் காதுகளில் உண்டாகும் குத்துவலி, சீழ் வடிதல், புண்கள், காதிரைச்சல், காதடைப்பு, சிலவகை செவிடு, முதலிய காதுகள் சம்மந்தமான எல்லா வியாதிகளையும் குணப் படுத்தும். குழந்தைகள் முதல் சகலரும் உபயோகிக்கலாம். பலர் உபயோகித்து பூர்ண குணம் பெற்றிருக்கின்றனர்.

**சிறியபாட்டில் $\frac{1}{8}$அவுன்ஸ் அணா 2** **பெரியபாட்டில் $\frac{1}{2}$அவுன்ஸ் அணா 7**

இன்னும் எல்லாவித சாஸ்திரீயமான மருந்துகளும் இவ் விடம் கிடைக்கும்.

தபாற் சிலவு வகையரா பிரத்யேகம்.

விலாசம்:— **T. S. நாராயணசாமி அய்யர்.**
ஆயுர்வேத வைத்தியர்
35, காக்காத்தோப்புத் தெரு, மதுரை.

---

## க்ஷயாந்தகம்.

ஷை பஸ்மமும் லேகியமும் உபயோகித்தால் நுரை யீரல் சம்மந்தமான க்ஷயம் (Pulmanory Tuberculosis) குணமாகும் ஷை வியாதியில் இம்மருந்து ஓர் Specific என்றே கூறவேண்டும்.

ஒரு மாதம் உபயோகிக்கக்கூடிய மருந்து **விலை ரூபா 25.**

தபாற் சிலவு தனி விலாசம்:—

**பண்டிட் S. நாராயண அய்யங்கார்.**
நிர்.2, போலீஸ் ஸ்டேஷன் மேல்புரம் சந்து, மதுரை.

3 - MAR 1939

களில் எதிலாவது நுரையீரல்பையில் திரவம் தேங்கும். சுவாசக்குழாயிலுள்ள கண்டங்கள் (glands) தொண்டையிலுள்ள சப்தத்திற்குரிய ஸ்தானம், சிறுகுடல்கள், ஆகிய இவைகள் இவ்வியாதியுண்டாகும் முக்கியஸ்தானங்கள். ஹிருதயம் இவ்வியாதியில் அடிக்கடி பலஹீனமாகும். ரக்தவமநம் இவ்வியாதியில் உண்டாகும் முற்குறிகளில் ஒன்று. இனி ஆங்கில வைத்யத்தில் இவ்வியாதிக்குச் செய்யும் சிகித்சையைக் கவனிப்போம். ஆங்கில வைத்தியத்தில் இவ்வியாதிக்கு முக்கியமாகக் கையாளப்படும் மருந்துகள் (1) காட்ஸ்லிவர் ஆயில் (2) கிரியோசோட் (ஓர்வித தார் எண்ணெ) (3) டூபர்குலின்—ஆனால் இம்மருந்தை உபயோகித்தால் நோயாளிக்கு ஆபத்தே மிகுந்துவிடும். ஆகவே இம்மருந்தை நிபுணர்களே தயாரித்து நிபுணர்களே கையாளவேண்டுமேயல்லாது சாதாரண வைத்யர்கள் இம்மருந்தைத் தொடக்கூடாது. க்ஷய வியாதியில் காணும் ரக்தவாந்திக்கு எமிடைன் ஹைட்ரோக்ளோரைட் என்னும் மருந்தை அரை கிரெயின் அளவு ஊசியால் குத்தி உடம்பில் செலுத்துகின்றனர். ஒரே நாளில் ஒருதடவைக்கு அதிகமாகவும் இம்மருந்தைச் செலுத்துகின்றனர். (4) கால்ஷியம் லாக்டேட் என்ற மருந்தைச் சுண்ணாம்புத்தண்ணீருடன் இவ்வியாதியின் ஆரம்ப தசையில் கொடுத்தால் சிறிது குணம் காணப்படுகின்றது. (5) சோடியம்மோரேட் (6) ஆர்ஸனிக் மெர்குரி காம்பவுண்டு இவ்விரண்டும் இவ்வியாதியில் சில வைத்தியர்களால் மெச்சப்படுகின்றன. ஆனால் மற்றவர்கள் இம்மருந்துகள் நிஷ்பிரயோஜனமென்கின்றனர். ஆர்ஸனிக், கிரியோ சோட் முதலியவைகள் சிலரால் உபயோகிக்கப்படுகின்றன. ஆனால் ஹௌரா ஜனரல் ஆஸ்பத்திரியைச்சேர்ந்த காப்டின் A குப்தா (Captain A. Gupta) என்பவர் இம்மருந்துகள் நம்பக்கூடியவைகள் அல்லவென்கின்றார். இன்டியன் மெடிகல் ரிகார்டு என்ற பத்திரிகையின் 1925 வருஷத்திய ஜூலை சஞ்சிகையைப் பார்க்கவும்.

கீழ்ச்சொன்ன 6 மருந்துகளை பெரும்பாலும் ஆங்கில வைத்யர்களால் இவ்வியாதியில் உபயோகிக்கப்பட்டு வருகிறது. இதில் நான்கு மருந்துகளில் ஷை வைத்யர்களுக்குள்ளேயே அபிப்பிராய

21070
சென்னை-600 008



பேதமிருப்பதைக் கீழே காட்டியுள்ளோம். கால்ஷியம் என்ற மருந்தும் காட்ஸ்லீவர் ஆயிலும் மற்ற இரண்டு மருந்துகள். இவைகளை இனி கவனிப்போம். இதில் கால்ஷியம் என்ற மருந்து இவ்வியாதியில் நோயாளிகளுடைய சரீரத்தில் கால்ஷியசத்து அதிகம் சேதமடைவதால் இதை இட்டு நிரப்பவே உபயோகிக்கப்படுவதாக நிபுணர்கள் கருதுகின்றனர். ஆனால் இவ்விஷயத்தில் நாம் வேறு விதமாக அபிப்பிராயப்படுகின்றோம். அதாவது சரீரத்தில் கால்ஷியச் சத்துக்குறைவை நாமும் ஒப்புக்கொள்ளுகின்றோம். ஆனால் அக்குறைவை ஈடுபடுத்தகால்ஷியத்தை சரீரத்தில் செலுத்துவதால் பலனில்லையென்றே சொல்லுகிறோம். சரீரம் கால்ஷியத்தை ஏற்றுக்கொண்டு அதைத் தன்னிடத்தில் இறுத்திப்பயன்படுத்திக் கொள்ளும் சக்தியை இழந்திருப்பதுதான் கால்ஷியக் குறைவுக்குக் காரணம் ஆகின்றது. இந்நிலைமையில் சரீரத்தில் ஷெ சக்தியை அபிவிருத்தியடையச் செய்ய வேண்டுமேயன்றி வெறும் கால்ஷியத்தைத் திணிப்பதில் பலனில்லை இனி காட்ஸ்லீவர் ஆயிலை கவனிப்போம். இந்நோயில் ஷெ ஆயிலைக்கொடுப்பது வெகு நாளாக வழக்கத்திலிருந்து வருகிறது. இந்த ஆயிலைக்கொடுப்பதின் நோக்கமென்னவென்றால் நோயாளியின் சரீரத்தில் போஷணையை வளர்ப்பதும், நோயை எதிர்க்கும்சக்தியை விருத்திசெய்வதும் ஆகிய இவையே. ஆனால் இந்நோயாளிகள் போதியவளவு மேற்படி ஆயிலை உட்கொள்ளமுடிவதில்லை. தங்கத்தை ஊசியால் ரத்தத்தில்செலுத்துவது ஓர் முறை. இம்முறைதற்காலம் பரீக்ஷார்த்த முறையாகவேயிருப்பதால் இதைப்பற்றி அதிகம் விவரிக்க வேண்டியதில்லை. ஆகவே இதுவரையில் நாம்விவரித்தபடி ஆலோசித்துப் பார்த்தால் ஆங்கில வைத்தியத்தில் க்ஷய வியாதிக்கு இதுவரையில் மருந்துகண்டுபிடிக்கப்படவில்லையென்பது வியக்தமாகிறது. ஆதலால் க்ஷயவியாதிக்கு உண்மையில் நல்லமருந்து கைவசமில்லாததால்தான் ஆங்கில வைத்யர்கள் இவ்வியாதியில்சுகாதாரமுறைகள் ஆகாரம், நல்லகாற்று, வெளிச்சம், என்ற இவைகளையே சரணமாகப்பற்றுகின்றனர். இவ்வியாதியில் சிலருக்குத் தொண்டையிலுள்ள சில தொந்திரவால் வரட்டு இருமல் அதிகமாக ஹிம்சிக்கும். ஆகவே தொண்டை வியாதிகளைக் கவனிக்க வேண்டும். இதில் சொல்லியுள்ள சூர்ணங்கள்

அல்லது லேகியங்களை விவேகத்துடன் உபயோகித்தால் அந்தத் தொண்டைத் தொந்திரவுகள் மறைந்துவிடும். இந்நோய் முதிர்ந்த நிலைமையில் திருப்திகரமாக நான் பலதடவைகளில் கையாண்டு வந்த மருந்துகளை வைத்யர்களின் அனுகூலத்திற்காக இச்சந்தர்ப்பத்தில் வெளியிட விரும்புகிறேன். இந்நோயில் சாயங்கால வேளைகளில் ஸர்வாங்கசுந்தர ரசத்தைத்தேனில் குழைத்துச் சாப்பிட்டு ஆடாதோடை வேரைக்கஷாயமிட்டு அனுபானமாகச் சாப்பிட வேண்டும். இவ் வியாதியில் தீவிரமான பல க்ஷயமும் ரக்த வாந்தியுமிருந்தால் ராஜமிருகாங்க ரசம் என்ற மருந்தைத் தேன் துளசிச்சார் அனுபானத்தில் சாப்பிட வேண்டும். ஸர்வாங்க சுந்தர ரசம் செய்யும் விதத்தைக்கீழே சொல்லிவிட்டோம். இனி மற்ற மருந்துகளைச் சொல்லுகிறோம் (1) ராஜமிருகாங்க ரசம் (2) மஹாப்ரவடிகா (3) காஞ்சனப்ர ரசம் (4) சந்திராமிருத ரசம் (5) வசந்ததிலகம் (6) கல்யாண சுந்தராப்ரம் (7) ரத்ன கர்ப்பபோடலி (8) காஸ லக்ஷ்மீவிலாசம் (9) அமிர்தப்ராசகிருதம் (10) சந்தனாதி தைலம் (11) வாஸா சந்தனாதி தைலம் (12) ச்யவனப் பிராசம் (13) திராக்ஷாரிஷ்டம். ஆக 13 மருந்துகளையும் நிலைமைக்குத் தக்கபடி இவ்வியாதியில் உபயோகிக்கலாம். இந்த 13 மருந்துகளையும் செய்யும் விதத்தை வரிசையாகச் சொல்லுகிறோம்.

1. **ராஜமிருகாங்க ரசம்.**— ரச பஸ்மம் 3 தோலா, சுவர்ண பஸ்மம் தோலா 1, தாமிர பஸ்மம் தோலா 1, சுத்தி செய்த மனோசிலை தோலா 2, (இவ்விடத்தில் மனோசிலைக்குப் பதிலாக கல்மதத்தை சிலர் சேர்க்க வேண்டுமென்கின்றனர்) சுத்திசெய்த தாளகம் தோலா 2, (மனோசிலை, தாளகம் இவைகளை பஸ்மம் செய்து சேர்ப்பது உத்தமம்) சுத்திசெய்த கந்தகம் தோலா 2, இவைகளைக் கல்வத்திலிட்டுப் பொடித்துச்சோகிகளுக்குள் (பலகரையென இதைச் சொல்வர்) அடைத்து, ஆட்டின் பாலால் அரைத்த வெங்காரத்தைச்சோகிகளின் வாயில் நன்றாகப்பருமனாகப்பூசி அந்தசோகிகளை வெய்யிலில் காயவைத்து ஓர்மண் அகலில்வைத்து மேல் அகல்மூடி வாய்க்குச் சீலைமண்செய்து பிறகு அகல் முழுவதற்குமே சீலைமண் செய்து கஜபுடமிட்டு ஆறினபிறகு எடுத்து மேல் அகலை விலக்கி

L: 5 ... N5V

உள்ளிருக்கும் சோகிகளை எடுத்துக் கல்வத்திலிட்டு நன்றாகப் பொடிசெய்து சீசாவில் பத்திரப்படுத்தி 8 கிரெயின்சு அளவு பெரியோர்களுக்குக் காலையில் மாத்திரம் ஒருவேளை பத்து திப்பிலிப் பொடி தேனுடனாவது அல்லது பத்தொன்பது மிளகுப் பொடி நெய்யுடனாவது குழைத்துக் கொடுக்கவும்.

2. **மகாப்ரவடிகா:—** அப்பிரக பஸ்மம், தாமிர பஸ்மம், அயச் சிந்தூரம், சுத்திசெய்த கந்தகம், சுத்திசெய்த ரசம், சுத்திசெய்த மனோசிலை, சுத்திசெய்த வெங்காரம், கடுக்காய்ப் பொடி, தான்றிக்காய்ப் பொடி, நெல்லிவற்றல் பொடி, சுத்திசெய்த நாபிக்கிழங்கு, வகைக்குத்தோலா 8 எடுத்து கல்வத்திலிட்டு நன்றாக நான்குயாமம் அரைத்து அடியில்கண்ட ரசங்களால் (8 தோலா இடையுள்ள) பாவனை செய்யவும். ரசங்களான— கஞ்சா யிலைச்சார், உருத்தலை கையாந்தகரைச் சார், கார்போகலரிசிக் கஷாயம், கரிப்பான் சார், வில்வயிலைச் சார், மந்தாரையிலைச் சார், முன்னையிலைச்சார், விருத்ததாரகமென்ற சமுத்திர சோகிவேர்க் கஷாயம், தும்புருக் கஷாயம், வல்லாரைச்சார், நொச்சியிலைச் சார், புங்கம்தழைச் சார், ஊமத்தையிலைச் சார், வெள்ளை விஷ்ணுகிராந்திச் சார், வாதமடக்கியிலைச்சார், இஞ்சிச் சார், கிரீஷ்ம சுந்தரம் (gima leaf) சார் (இச் சரக்கு வங்காளத்தில் கிடைக்கும்) ஆடாதோடையிலைச் சார், வெற்றிலைச்சார், இந்த வரிசைக்கிரமத்திலே பாவனை செய்யவும். அதாவது முன் சொன்ன மருந்தைக் கல்வத்தில்வைத்து முன் சொன்ன ரச வரிசைப்படி 8 தோலாயிடை ரசத்தைக் கல்வத்திலுள்ள மருந்தில் விடவும். அது உலர்ந்தபிறகு அடுத்த ரசத்தைவிடவும். கடைசி ரசத்தை விட்டபிறகு 8 தோலா மிளகு பொடியைப் போட்டு அரைத்து இரண்டு கிரெயின்சு அளவுக்கு மாத்திரை உருட்டி வெய்யிலில் காயவைத்து சீசாவில் பத்திரப்படுத்திக் கொள்ளவும். வேளைக்கு 1 மாத்திரை வீதம் தினம் இருவேளை சாப்பிடவும். அதிசாரம், சூதிகாஜ்வரம், பாண்டு, பலக்ஷயம், வாதநோய், வயிற்றுவலி, மகோதரம், சன்னிபாதம், க்ஷயம் முதலியவைகளில் குணம் செய்யும்.

3. **காஞ்சனாப்ர ரசம்:—** சுவர்ண பஸ்மம், ரசசிந்தூரம், முத்து

பஸ்மம், அயச்சிந்தூரம், அப்பிரக பஸ்மம், பவழ பஸ்மம், கடுக்காய்ப் பொடி, வெள்ளி பஸ்மம், கஸ்தூரி, மனோசிலை இவைகளை சமயிடையாக எடுத்துக் கல்வத்திலிட்டு சுத்த ஜலத்தைவிட்டு நன்ருகவரைத்து இரண்டு குன்றிமணியிடை மாத்திரைகளாக உருட்டி வெய்யிலில் காயவைத்துக் கொள்ளவும். உசிதமான அனுபானத்துடன் வேளைக்கு 1 மாத்திரைவீதம் தினம் இருவேளை கொள்ள க்ஷயம், சுக்ரமேஹம், இருமல் முதலியவை தீரும்.

4. **சந்திராமிர்த ரசம்:—** சுத்த ரசம் தோலா 2, சுத்த கந்தகம் தோலா 2, அயச்சிந்தூரம் தோலா 2, சுத்த வெங்காரம் தோலா 8, மிளகு பொடி தோலா 4, கடுக்காய்ப்பொடி, தான்றிக்காய்ப் பொடி, நெல்லிவற்றல் பொடி, சுக்குப் பொடி, மிளகு பொடி, திப்பிலிப் பொடி, செவ்வியப் பொடி, மல்லிவிதைப் பொடி, ஜீரகப் பொடி, இந்துப்புப் பொடி, வகைக்குத் தோலா 1, இவைகளைக் கல்வத்திலிட்டு வேண்டியவளவு வெள்ளாட்டுப் பால்விட்டு அரைத்து 9 குன்றிமணி (18 கிரெயின்சு) யளவு உருண்டையாக உருட்டி வெய்யிலில் காயவைத்து சீசாவில் பத்திரப்படுத்திக் கொள்ளவும். வேளைக்கு 1 மாத்திரைவீதம் தினம் இருவேளை உபயோகிக்கவும். வரட்டு இருமலில் இது மிகுந்த நன்மைசெய்யும். பின்னும் ரக்த வாந்தி, ஆஸ்த்மா, ஜலதோஷத்துடன் கூடிய காய்ச்சல், இவைகளில் குணம் கொடுக்கும். தகுந்த அனுபானத்துடன் இதை உபயோகித்தால் நுரை யிரல்களுக்கு நல்ல டானிக் ஆகும். பொதுவாக இம் மருந்தை இஞ்சி ரசம், தேன், திப்பிலி இந்த அனுபானங்களில் கொடுக்கலாம். மூச்சுத் திணறல், ஆஸ்த்மா, இவைகளில் வெள்ளாட்டுப் பாலுடன் அல்லது தாமரைக்கிழங்குக் கஷாயத்துடன் கொடுக்கலாம். ஆனல் அடியில்கண்ட கஷாயத்துடன் உபயோகித்தால் இம்மருந்து மிகுந்த நன்மை செய்யக் கண்டிருக்கிறோம்.

கஷாயம்— ஆடாதோடை, சீந்திற்கொடி, சிறுதேக்கு, கோரைக்கிழங்கு, கண்டங்கத்திரி, இவைகளை வகைக்கு 48 கிரெயின்சு எடுத்து இடித்து ஒருபவுண்டு ஜலத்தில் போட்டு 4 அவுன்சு ஜலமாக அடுப்பேற்றி வற்றவைத்து வடிகட்டி 4, 5 துளி தேன்விட்டு உபயோகிக்கவும்.

5. **வசந்ததிலக ரசம்:—** சுவர்ண பஸ்மம் தோலா 1, அப்பிரக பஸ்மம் தோலா 2, அயச்சிந்தூரம் தோலா 3, சுத்தரசம் தோலா 4, சுத்த கந்தகம் தோலா 4, வெள்வங்க பஸ்மம் தோலா 2, முத்து பஸ்மம் தோலா 2, பவழ பஸ்மம் தோலா 2, இவைகளைக் கல்வத்தி லிட்டு சிறு நெரிஞ்சில்கஷாயம், ஆடாதோடை யிலைச்சார், கரும்புச் சார், இவைகளால் வரிசையாக அரைத்து, வெய்யிலில் காயவைத்து வாய் குறுகிய சீசாவில்போட்டு (பாதி சீசாவரையில்) ஓர் மாக்கல்லால் சீசாவின் வாயைப்பொருத்தி முதலில் வாய்க்குச் சீலைமண் செய்து பிறகு சீசாமுழுவதும் 7 சீலைமண்செய்து நன்றாக வெய்யிலில் காயவைத்து ஓர் பானையில் 4 விரல் உயரம் மணல் கொட்டி அதில் இந்தசீசாவை நிறுத்தி பானையின்கழுத்தளவு மணல்கொட்டி (மணல் கொட்டும்பொழுது சீசா சாய்ந்துவிடாமல் கவனிக்கவும்.) பானைக்கு மேல்வாயை ஓர் அகலால்மூடி சீலைமண்செய்து அடுப்பேற்றி 18-மணிநேரம் தீ எரிக்கவும். ஆறவிட்டு எடுத்து சீசாவிலுள்ள மருந்தை நிதானமாகக் கல்வத்தில் கொட்டி கஸ்தூரி, பச்சைக் கர்ப்பூரம், வகைக்குத் தோலா 4 சேர்த்து நன்றாக அரைத்து சீசாவில் பத்திரப் படுத்திக்கொள்ளவும். வேளைக்கு 4 கிரெயின்சு அளவில் தினம் இருவேளை தகுந்த அனுபானத்துடன் உபயோகிக்கவும். எலும்புருக்கி, பலக்ஷயம், க்ஷயம், இவ்வியாதிகளிலும் சீழ்போன்ற கபம் மிகுந்துவிழும் காலங்களிலும் உபயோகிக்கலாம். ஹிருதய வியாதி முதலியவைகளில் தகுந்த அனுபானத்துடன் கொடுக்க நன்மை செய்யும்.

6. **கல்யாணுப்ர ரசம்:—** கிருஷ்ணாப்பிரக சிந்தூரம் 8 தோலா எடுத்துக் கல்வத்திலிட்டு அதை நெல்லிச்சார், கோரைக் கிழங்குக்கஷாயம், கண்டங்கத்திரிச் சார், தண்ணீர்விட்டான் கிழங்குச்சார், கரும்புச்சார் பில்வவேர்க்கஷாயம், முன்னைவேர் கஷாயம், ஆடாதோடை கஷாயம், பெருவாகைக்காய் கஷாயம், பாதிரிவேர் கஷாயம், குருந்தொட்டி வேர் கஷாயம், இந்த வரிசைப்படி தனித்தனி 8 தோலா யிடையுள்ள ரசத்தால் அரைத்து குன்றுமணிப் பிரமாணம் குளிகை செய்து வெய்யிலில் காயவைத்துச் சீசாவில் பத்திரப் படுத் கொள்ளவும். வேளைக்கு 1 மாத்திரைவீதம் தினம் இரண்டுவேளை

தேனில் உபயோகிக்கவும். க்ஷயம், எலும்புருக்கி, ஆஸ்த்மா, உதரம், ரக்த வாந்தி, கிருமி, பலவித ரோகம், இவைகளில் நன்மை செய்யும்.

7. **ரத்னகர்பபோடலி ரசம்:—** ரசசிந்தூரம், வஜ்ரபஸ்மம், சுவர்ண பஸ்மம், வெள்ளி பஸ்மம், கருவங்க பஸ்மம், அயச் சிந்தூரம், தாமிர பஸ்மம், முத்து பஸ்மம், ஸ்வர்ணமாக்ஷிக பஸ்மம், பவழ பஸ்மம், சங்க பஸ்மம், இவைகளைச் சமயிடையாக எடுத்துக் கல்வத்திலிட்டு இஞ்சிரஸத்தால் ஏழுநாள் கைவிடாமல் அரைத்து, உலர்த்தி சுத்தி செய்த சோகிகளில் அடைத்து அந்த சோகிகளின் வாயை எருக்கம் பால்விட்டு அரைத்த வெங்காரத்தால் பருமனாகப் பூசி உலர்த்தி ஓர் அகலில் வைத்து மேல் அகல் மூடி அகல் முழுவதற்கும் சீலமண் செய்து கஜபுடமிடவும். குளிர்ந்த பிறகு எடுத்து அகல் நீக்கி உள்ளிருக்கும் சோகிகளை அப்படியே கல்வத்திலிட்டு நன்றாகப் பொடித்து நொச்சிச் சார், இஞ்சிச் சார், இவைகளால் தனித்தனி ஏழு பாவனைகளும் கொடுவேலி கஷாயத்தால் 21 பாவனைகளும் செய்து பிறகு வெய்யிலிலுலர்த்தி சீசாவில் பத்திரப்படுத்திக் கொள்ளவும் நான்கு குன்றுமணியிடை தேனிலாவது அல்லது தேன் திப்பிலிப் பொடியுடனாவது அல்லது மிளகு பொடி நெய்யுடனாவது கொடுக்கவும்.

குறிப்பு:— இப்புஸ்தகத்தை ஆங்கிலத்தில் எழுதியுள்ள கவிராஜ் A. C. கவிரத்ன என்பவர் கீழ்சொன்ன மருந்துகளில் தவறான பல அர்த்தத்தை எழுதியுள்ளார். இந்த மொழி பெயர்ப்பில் அத்தப்பிதங்களை மாற்றி சரியான அர்த்தங்களை நாம் எழுதிவருகிறோம். இந்த ரத்னகர்பபோடலி ரசத்தில் முறையே மாறிவிட்டதால் சரியான முறையைக் கீழே குறிப்பிடுகிறோம். (7) **ரத்னகர்பபோடலி ரசம்:**–ரசசிந்தூரம், வஜ்ரபஸ்மம், சுவர்ணபஸ்மம், வெள்ளி பஸ்மம், கருவங்கபஸ்மம், அயச்சிந்தூரம், அப்பிரகசிந்தூரம், முத்து பஸ்மம், ஸ்வர்ணமாக்ஷிக பஸ்மம், பவழபஸ்மம், ராஜாவர்த்தபஸ்மம், வைக்ராந்தபஸ்மம், கோமேதகபஸ்மம், புஷ்பராகபஸ்மம், சங்கபஸ்மம், இவைகளைச் சமயிடையாக எடுத்து கொடுவேலி கஷாயத்தால் ஏழு நாட்கள் கைவிடாமல் அரைத்து உலர்த்தி அதை சோகிகளில்

அடைத்து, மேலுள்ளவை முன்போல. இந்த கவிராஜ் இம்மருந்தில் சற்றும் அனுபவமின்றி எழுதியிருப்பது தெளிவாகத் தெரிகிறது. எவ்விதமெனில் இவர் சுவர்ணமாக்ஷிகம் வருமிடங்களில் அதைச் சுத்தி செய்து அப்படியே மருந்தில் சேர்க்கவேண்டு மென்கின்றார். ஆனால் அவ்விதம் ஸ்வர்ணமாக்ஷிகத்தைச் சுத்தி செய்து உபயோகித்தால் நோயாளிக்கு மரணமே நேரும். சாஸ்திரங்களில் எவ்விடத்திலும் அவ்விதம் சொல்லப்படவில்லை. அதை பஸ்மம் அல்லது சிந்தூரம் செய்தே உபயோகிக்க வேண்டும். ஆகவே நாம தமிழில் எழுதும்போது சுவர்ணமாக்ஷிக சிந்தூரமென்றே எழுதி வந்திருக்கிறோம். இதுதான் சாஸ்திரத்திற்கும் அனுபவத்திற்கும் ஒட்டியது. தவிர இம்மருந்தில் மயில்துத்தம் சுத்தி செய்து சேர்க்கும்படி எழுதியிருக்கிறார். அதுமூலத்திலுள்ள தப்பான பாடத்தை நம்பி எழுதிவிட்டார். மயில் துத்தம் (copper sulphate) இவ வியாதிக்கு விருத்த மென்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. அப்பிரகத்திற்குப் பதிலாக தாமிரம் எழுதிவிட்டார். மற்றும் நான்கு ரத்னங்களை எழுதவில்லை. இந்த நான்கு ரத்னங்கள் சேர்ந்தால்தான் ரத்னகர்பபோடலீ என்ற பெயர் பொருந்தும். இவ்விதமே இவர் ஒவ்வொரு மருந்துகளிலும் எழுதியுள்ள தவறுகளை சரிப்படுத்தி நாம் எழுதியுள்ளோம். இந்த ரத்னகர்பபோடலீ ரசம் என்ற மருந்து வெகுகாலமாக எங்கள் அனுபவத்தில் வந்துள்ள முறை. இது யோகரத்னகாம் என்ற புஸ்தகத்தில் க்ஷய பிரகரணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பத்திராதிபர்.

8. லக்ஷ்மீவிலாச ரஸம்:— வெள்வங்க பஸ்மம், காந்த சிந்தூரம், அப்பிரக சிந்தூரம், தாமிர பஸ்மம், வெங்கல பஸ்மம், சுத்திசெய்த ரசம், சுத்திசெய்த கந்தகம், சுத்திசெய்த தாளகம், சுத்திசெய்த மனோசிலை, சுத்திசெய்த பால்துத்தம் (தாளகம், மனோசிலை, பால் துத்தம், இந்த மூன்றையும் பஸ்மம் செய்து சேர்ப்பது நல்லது. ப-ர்) இவைகளை வகைக்குத் தனித்தனியாக 8 தோலா எடுத்துக் கல்வத்திலிட்டு அரைத்து உருத்தலை கையாந்தகரை ரசத்தாலும் கொள் கஷாயத்தாலும் தனித்தனி மூன்று நாள் பாவனை செய்து, அதில் ஏலம், ஜாதிக்காய், கருவாப்பட்டை, கிராம்பு, ஓமம், ஜீரகம்,

திரிகடு, திரிபலை, தகரை, பெரியலவங்கப் பட்டை, மூங்கிலுப்பு, இவைகளைத் தனித்தனி வகைக்கு இரண்டு தோலா எடுத்துப் பொடி செய்து முன் மருந்தில் சேர்த்து உருத்தலை கையாந்த கரைச் சாற்றாலும் கொள்ளுக் கஷாயத்தாலும் அரைத்து கடலைப் பிரமாணம் குளிகை செய்து வெய்யிலிலுலர்த்தி சீசாவில் பத்திரப் படுத்திக் கொள்ளவும். வேளைக்கு 1 மாத்திரை வீதம் தினம் இரண்டு வேளை குளிர்ந்த ஜலம் அனுபானத்துடன் சாப்பிடவும்.

9. அமிர்தப்ராச கிருதம்:— அடபொதியன் கிழங்கு, காகோலி, க்ஷீரகாகோலி, மேதா, மகாமேதா, உளுந்துக்கொடி, பயறின்கொடி, ரிஷபகம், ஜீவகம், அதிமதுரம், சுக்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, பூலாங்கிழங்கு, ஓரிலை, மூவிலை, கண்டங்கத்திரி, முள்ளி, சாரணை, வெள்ளைச்சாரணை, பூனைக்காலி விதை, பெருங்குமிழம் பழம், ஈச்சம் பழம், சிறுதேக்கு, கிஸ்மிஸ், பானீயபலம் (வடதேசத்தில் கிடைக்கும்,) கீழ்காய்நெல்லி வேர், முதக்கன் கிழங்கு, திப்பிலி, குருந்தொட்டி, இலந்தைப் பழம், அக்ரோட், பேரீச்சம் பழம், பாதாம் விதை, பிஸ்தா, வகைக்குத்தோலா ஒன்று எடுத்து விதைகளைத் தனியாக அரைத்தும் மற்றவைகளை வஸ்திரகாயம் செய்து ஓர் இரும்புவாணலியில் போட்டு அதில் பசும் நெய், பசும்பால், நெல்லிக்காய்ச்சார், முதக்கன் கிழங்குச்சார், கரும்புச்சார், ஆட்டு மாமிசரசம், (ஆட்டு மாமிசத்தை கஷாயம் செய்முறையில், கஷாயமாகச் செய்து எடுத்துக்கொள்ளவும்.) இவைகள் தனித்தனி வகைக்குப் பக்காப்படியில் ஒரு படி விட்டு மெழுகு பதமாகக் காய்ச்சவும். ஆறின பிறகு வடிகட்டி அதில் பக்காப் படியில் அரைப் படி தேன் விட்டு நயம் ஜீனி 200 தோலாவும், மிளகு, கருவாப் பட்டை, ஏலம், பச்சிலை, சிறுநாகப்பூ வகைக்குத் தோலா இரண்டு வஸ்திரகாயம் செய்த பொடியையும் சேர்த்து கரண்டியால் நன்றாகக்கலக்கி ஜாடியில் பத்திரப்படுத்தவும். இது ஆச்சரியமான குணத்தைக்கொடுப்பதால் அமிர்தம் என்றபெயர் இதற்குமிகவும் ஏற்றதே. தகுந்த அளவில் உபயோகிக்க இது இருமல், ஆஸ்த்மா, விக்கல், ரத்தவாந்தி, ஹிருதயத்துடிப்பு, மூத்திர நோய்கள், கர்ப்ப நோய்கள், மலட்டுத்தன்மை இவைகளில் மிகுந்த நன்மையளிக்கும். சரீரம்

மெலிந்தவர்களுக்கும் சரீரம் உலர்ந்துபோகிறவர்களுக்கும் இது மாமிசதசைகளை வலுப்படுத்தி பலத்தை யுண்டு பண்ணும் டானிக்காக ஆகின்றது.

10. **வாஸா சந்தனாதித் தைலம்:**—வெள்ளைச்சந்தனம், அரேணுகம், பூதி, அமுக்கிரா, முதியார் கூந்தல், கருவாப் பட்டை, ஏலம், பச்சிலை, தேசாவரம், சிறுநாகப்பூ, மேதா, மகாமேதா, திரிகடு, அரத்தை, அதிமதுரம், கல்பாசி, பூலாங் கிழக்கு, கோஷ்டம், தேவதாரு, ஞாழல், தான்றிக்காய், வகைக்குத் தோலா நான்கு எடுத்து வஸ்திரகாயம் செய்து ஷை பொடியை ஓர் இரும்பு வாணையில் போட்டுஅதில், 400தோலா ஆடாதோடைவேரை 8பக்காபடி ஜலம் விட்டு நாலிலொன்றாக வற்றவைத்த கஷாயம் படி 2, கொம்பரக்கு 400 தோலா பொடி செய்து முன்போல கஷாயம் செய்து வற்ற வைத்து படி 2, தயிர் நீர் படி 2 இவைகளை அந்தப் பொடியில் போட்டுக்கலக்கி அதில் நல்லெண்ணை படி 4-விட்டு வெள்ளைச்சந்தனம், தோலா 80, சீந்திற் கொடி தோலா 80, சிறுதேக்கு தோலா 80, தசமூலம் தனித்தனி தோலா 8, கண்டங்கத்திரி வேர் தோலா 80, எடுத்து இடித்து 8 பக்காப்படி ஜலத்தில்போட்டு அடுப்பேற்றி இரண்டு பக்காப்படி ஜலமாக வற்றவைத்து வடிகட்டி அக்கஷாயத்தையும் ஷை இரும்பு வாணையில்விட்டு அடுப்பேற்றித் தைலப்பதம் கவனித்து வடித்து வடிகட்டி ஜாடியில் பத்திரப் படுத்தவும், இதைத் தேய்க்க ஈரல்களின் தொழில் துரிதப்படும். இத்தைலம் ஆஸ்த்மா முதலிய ரோகங்களிலும் குணம் கொடுக்கும்.

11. **சந்தனாதித் தைலம்:**— வெள்ளைச் சந்தனம், அகில், தாளிசபத்திரி,மஞ்சிஷ்டி, நகம், பதிமுகம்,கோரைக்கிழங்கு,பூலாங்கிழங்கு, கொம்பரக்கு, மஞ்சள், சிகப்புச் சந்தனம், வகைக்குத் தோலா 4 எடுத்துப் பொடிசெய்து ஓர் இரும்பு வாணையில் போட்டு அதில் நல்லெண்ணை பக்காப்படி 2 விட்டு, அதில் சிறுதேக்கு, ஆடாதோடை, கண்டங்கத்திரி வேர், குருந்தொட்டி, சீந்திற்கொடி, இவைகளை வகைக்குத் தனித்தனியாக 80தோலா எடுத்து இடித்து ஓர் பானையில் போட்டு சுத்த ஜலம் பக்காபடி 8 விட்டு நாலில் ஒன்றாகக் காய்ச்சி வடிகட்டி அக்கஷாயத்தை விட்டு, அடுப்பேற்றி தைலப்

பதத்தில் வடித்து வடிகட்டி அதில் நெரியரிசிப்பால், குங்குமப்பூ, நகம் (பக்வமாக வறுத்தது) சந்தனத் தூள், பச்சைக் கர்ப்பூரம், ஏலம், கிராம்பு, இவைகளை வகைக்குத் தோலா 1 எடுத்துப்பொடித்துப் போட்டு ஜாடியில் மூடி வைக்கவும். இத்தைலத்தைத் தேய்க்க மாமிச தசைகளுக்கு வலுவும் சுத்தமான ரக்த ஓட்டமும் உண்டாகும்.

12. சியவனப்ராச லேகியம்:— தசமூலம், குருந்தொட்டி வேர், கோரைக் கிழங்கு, ஜீவகம், ரிஷபகம், நெய்தல் கிழங்கு, பயற்றுக் கொடி, உளுந்துக் கொடி, திப்பிலி, கர்காடக சிருங்கி, மேதா, கீழ்காய்நெல்லி, ஏலம், அடபொதியன், அகில், திராக்ஷை, கோஷ்டம், செஞ்சந்தனம், பூலாங்கிழங்கு, சாரடை, (சாரணத்தி) காகோலீ, க்ஷீரகாகோலி, காகநாஸா, சீந்திற் கொடி, முதக்கன், ஆடாதோடை வேர், இவைகளைத் தனித்தனி 4 தோலா எடுத்து, இடித்து, ஓர் பானையில் போட்டு, அதில் பழுத்த நெல்லிக்காய் 500 சேர்த்து சுத்த ஜலம் 8 பக்காப்படி விட்டு அடுப்பேற்றி நாலில் ஒன்றாக வற்றவைத்து கஷாயத்தை வடிகட்டிக்கொள்ளவும். அந்த நெல்லிக்காய் 500-ம் தனியாக எடுத்து உள்ளிருக்கும் விதையை நீக்கி சற்று அரைத்துப் பிறகு ஓர் இருப்பு வாணலியில் அந்த விழுதைப் போட்டு நல்லெண்ணை, நெய் வகைக்குத் தோலா 24 விட்டு அடுப்பேற்றி சிறுதீயிட்டு இரும்புச் சட்டுவத்தால் கிளரிக் கொடுத்து வதக்க வேண்டும். பிறகு ஓர் இரும்பு வாணலியில் நயம் ஜீனி 200 தோலா போட்டு முன் வடிகட்டி வைத்த கஷாயத்தையும் நெல்லிக்காய் விழுதையும் போட்டு லேகியமாகக் கிளரவும். அடுப்பிலிருந்து இறக்கி ஆறினபின் தேன் 24 தோலா, மூங்கிலுப்பு தோலா 16, திப்பிலிப் பொடி, தோலா 8, கருவாப்பட்டை, பச்சிலை, ஏலம், சிறுநாகப்பூ இவைகளின் பொடி தனித்தனி தோலா 2, இவைகளையும் அந்த லேகியத்தில் போட்டுக் கிண்டி ஜாடியில் பத்திரப்படுத்திக் கொள்ளவும். குறிப்பு:— நெல்லிக்காய்களை ஓர் மெல்லிய துணியில் மூட்டையாகக்கட்டி பானையில் கஷாயச் சரக்குகளுடன் சேர்த்துக் கஷாயமிடவும். வேளைக்கு 1 முதல் 2 தோலா வரையில் உபயோகிக்கவும். வெள்ளாட்டுப்பால் அனுபானமாகச் சாப்பிடவும். தொண்

டைக்கம்மல், இருமல், ஈரல்களின் பலக்குறைவு, ஆஸ்த்மா, காசம், க்ஷயம், பலக்ஷயம், இவைகளில் குணம் கொடுக்கும். ருதுக்கள் மாறும் காலங்களில் காணும் ஜலதோஷத்திற்கு நல்லது. மெலிந்த சரீரங்களுக்கு போஷணையளித்துப் பெருக்கச் செய்யும். ஆங்கில வைத்யர்கள் காட்ஸ்லிவர் ஆயிலை உபயோகப்படுத்தும் நிலைமைகளில் இதன் உபயோகத்தால் அதிக குணங்களை நிதர்சனமாகக் கண்டிருக்கிறோம்.

13. திராக்ஷாரிஷ்டம்:— திராக்ஷைப் பழம் 200 தோலாவை ஓர் பானையில் போட்டு சுத்த ஜலம் 16 பக்காப்படி விட்டு அடுப்பேற்றி நாலில் ஒன்றாகக் காய்ச்சி வடிகட்டி அக்கஷாயத்தை ஓர் நெய்க்குடத்தில் விட்டு, வெல்லம் 800 தோலா அதில் சேர்த்து, கருவாப் பட்டை, ஏலம், பச்சிலை, சிறுநாகப்பூ, ஞாழல், மிளகு, திப்பிலி, பிடாலவணம், இவைகளை வகைக்குத் தோலா 4 எடுத்து இடித்துப் பொடிசெய்து ஷை பானை அல்லது குடத்தில் போட்டு வெல்லம் நன்றாகக் கரையும்படி கலக்கிப் பிறகு பானை வாய்மூடி களிமண் பருமனாகத் தடவி (இதை மொத்துப் போடுவது என சாதாரணமாகச் சொல்லுவார்கள்.) அப்படியே அசையாமல் 30 நாள் வைத்திருந்து பிறகு பானைவாய் திறந்து மேல் ஆடையைக் கலையாமல் ஒதுக்கி கலக்காமல் தெளிவாக வடிகட்டிக்கொண்டு சீசாவில் பத்திரப் படுத்தவும். வேளைக்கு அரை அவுன்சு தினம் 2 அல்லது மூன்று வேளை உபயோகிக்கலாம். இருமல், ஆஸ்த்மா, க்ஷயம், ஈரல் நோய்கள், தொண்டை நோய்களில் நன்மை செய்யும். உள்ளிருக்கும் கப ஜவ்வுகளுக்கும் மாமிச தசைகளுக்கும் உத்சாக சக்தியை யளிக்கும். டானிக் குடல்களின் தொழிலை ஒழுங்கு படுத்தும்.

பத்தியம்:— ஒயின், காட்டு ஜந்துக்களின் மாமிசம், மான் மாமிசம், பாசிப்பயறு, அறுபதாங்குறுவை, கோதுமை, யவம், சம்பா நெல், கொத்துக்கடலை, சிகப்புச்சம்பா நெல், ஆட்டு மாமிசம், வெண்ணை, பால், வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம், நெல்லிக்காய், பேரீச்சம் பழம், புஷ்கரமூலம், ஈச்சம் பழம், இளநீர்

முருங்கை, புடல், இளம் பனை நொங்கு, கொடிமுந்திரிப் பழம், சதகுப்பை, இந்துப்பு ஆடாதோடையிலை, பசு நெய், எருமைநெய், சர்க்கரை, பச்சைகற்பூரம், ரசாலா (தயிரில் செய்யும் ஓர் பக்வம்) கஸ்தூரி வெள்ளைச் சந்தனம்,தைலஸ்நானங்கள், வாசனைப்பூச்சுகள் ஆற்றங்கரைஸ்நானம், நல்லஉடுப்புகள், நல்ல பங்களாவாசம், மாலைகள், உத்சாகமான கதைகள், இளங்காற்று, பாட்டு, நர்த்தனம் இவைகளையனுபவித்தலும், நிலாவில் சஞ்சாரம், சாந்தி ஹோமம், ஆலய பூஜை, காலை மாலைகளில் சரீரம் முழுவதும் சூரிய கிரணம் படும்படி நோயாளியை வைத்தலும். வெள்ளாட்டுக் கொட்டகையில் படுப்பதும் வெள்ளாடு மூத்திரம் மலங்களை சரீரம் முழுவதும் பூசிக்கொண்டு சில நாழிகை வெய்யிலில் இருப்பதும் புதுக்காற்றில் வசிப்பதும் கடல் பிரயாணமும் இந்நோயாளிகளுக்கு நன்மை செய்யும். வருஷம் முழுவதும் ஒரேமாதிரியாக வரட்சியுள்ள (dry) பிரதேசங்கள் வாசத்துக்கு ஏற்றவை.

**தள்ளவேண்டியவைகள்:—** கோபம், கவலை, புணர்ச்சி, இவைகள் கூடாது. விரேசனத்திற்கு மருந்து கொடுக்கக் கூடாது. மலமூத்திரங்களை அடக்கக் கூடாது. ஆயாசம், வியர்வை யுண்டுபண்ணுதல், கண்களுக்கு மையிடுதல், அகாலவிழிப்பு, பலத்தை மீறிய வேலை, ஒரே இடத்தில் உட்கார்ந்திருத்தல், தாம்பூலம் போடுதல், ஆகிய இவை கூடாது. வெள்ளரிக்காய் வகைகள், கொள்ளு, பூண்டு, உளுந்து, பெருங்காயம், புளிப்பு, கசப்பு, துவர்ப்பு, காரம், சாகவகைகள், உப்பு, சிம்பி தான்யம், கத்தரிக்காய், பாகல், நல்வெண்ணை, பில்வம், கடுகு, பகல் நித்திரை இவைகளைத் தள்ளவேண்டும்." இதுவரையில் கவிராஜ் A. C. கவிரத்ன என்பவர் ஆங்கிலத்தில் எழுதியுள்ள வியாசத்தை மொழி பெயர்த்தோம். இவ்வியாசத்தில் அவர் சொல்லியுள்ள அனைத்தையும் நாம் ஒப்புக்கொள்ள முடியாவிட்டாலும் அவர் சொல்லியுள்ள மருந்துகள் முழுவதும் மிகுந்தகுணம் கொடுப்பவைகள் என்பதில் அபிப்பிராய பேதம் இருக்க முடியாது. அவர் சொல்லியுள்ள (1) ஜயமங்கள ரசம், (2) சர்வாங்கசுந்தர ரசம், (3) யக்ஷ்மாரி, (4) ஸிதோபலாதி சூர்ணம், (5) ஏலாதி சூர்ணம், (6) தாளிசாதி சூர்ணம் (7) கர்ப்பூ

ராதி சூர்ணம். கீழ்சொன்ன ராஜமிருகாங்க ரசம் முதலிய 13 மருந்துகள் ஆக மொத்தம் 20 மருந்துகளும் ஏறக்குறைய எல்லா வைத்யர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருபவைகளே. இவற்றுள் ஜயமங்கள ரசம் கர்பூராதி சூர்ணம் என்ற இரண்டு மருந்துகள் நீங்கலாக மற்ற 18 மருந்துகளும் பைஷஜ்ய ரத்னவளியில் சொல்லப்பட்டிருக்கின்றன. கர்பூராதி சூர்ணம் யோக ரத்னகாரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகவே ஜயமங்கள ரசம் ஒன்றுதான் காய்ச்சல் பிரகாணத்திலுள்ளது. இம்மருந்துகளில் காணப்படும்பல தவறுகளை ஒழுங்குபடுத்தி நாம் வெளியிட்டிருக்கிறோம்.

இனி ஆங்கில வைத்யர்கள் சமீபத்தில் இந்நோய் விஷயமாகக் கூறியுள்ள அபிப்பிராயங்களை விவரிக்கின்றோம். 1938 ஷ மே மீ 7 உ டாக்டர் T. S. S. ராஜன் அவர்கள் சென்னையில் பேசியதின் சாரமாவது— "க்ஷயரோய் நமது விவேகத்தாலும் சாதுர்யத்தாலும் நம்மை அணுகவொட்டாமல் தடுக்கக் கூடிய வியாதிகளில் ஒன்று." "சிகித்சையைக் காட்டிலும் வரவொட்டாமல் தடுப்பது நலம்" என்ற மூதுரை மற்ற வியாதிகளுக்குப்போல க்ஷய நோய்க்கும் பொருத்தமானது வாலிபர்களை இவ்வியாதி பிடிக்கின்றது. தவிர சரீர போஷணையை யொட்டி மிகுந்த தேவையுள்ளவர்களுக்கும் யௌவன வாழ்க்கையில் அவசியம் வேண்டிய இன்றியமையாத பலவித சரீர சக்திகளில் மிகுந்த தேவையுள்ளவர்களுக்கும் இந்நோய் காணுகின்றது. வாலிபர்களுக்கு சரீர இயற்கையின் பல தேவைகளை விவேகத்தால் வெல்லலாம்

இந்நோயின் பூர்வ ரூபங்கள்:— இவ்வியாதியைக் கொஞ்சமும் அறியாத சாமான்ய ஜனங்களுக்கு க்ஷயமென்பது என்ன என்பதைப்பற்றிச் சொல்லுவது நல்லதுதான். ஆனால் இது பார்வைக்குத் தோன்றுவது போல செய்கையில் அவ்வளவு சுல்பமல்ல. சாதாரணமாக நன்றாகப் படித்த வைத்தியர்களையே தடுமாறும்படி செய்யும் இவ் வியாதியின் அடையாளங்கள் சாமான்ய ஜனங்களுக்குச் சுலபத்தில் புரியமாட்டா இருப்பினும் சாமான்ய ஜனங்கள் கூட இவ்வியாதியைக் கண்டுபிடிக்கும்படி சில அடையாளங்கள் இவ்வியாதியில் காணப்படுகின்றன. வாலிப தசையில் தகுந்த

காரணமின்றி சரீரத்தில் இடை கிரமமாகக் குறைந்து வந்து கொண்டிருந்தால் அது சரீரத்தில் ஏதோ சீர்கேட்டின் அடையாள மாகக் கருதப்பட வேண்டும். சரீரம் மெலிந்து வருவது நம்மில் படிக்காதவர்களுக்குக் கூட எளிதில் புலப்படும். ஆகவே இந் நோயை க்ஷய மென்கின்றனர். க்ஷயம் என்றால் மெலிந்து போதல் எனப் பொருள். ஆகவே குழந்தைகளோ அல்லது வாலிபர்களோ தங்கள் தங்கள் வயதுக்குத் தக்கவாறு சரீர வளர்ச்சியைப் பெறா விட்டால் அந்நிலைமையை மிகவும் ஆபத்தாகக் கருத வேண்டும். ஏனெனில் சரீர மெலிவு யாருடைய கவனத்தையும் பெறாமல் கள்ளத்தனமாக வந்துவிடும். இது க்ஷய வியாதியின் முதல் அடையாளம், இந்த மெலிவுடன் உள்ளங்கைகளிலும் அல் லது உள்ளங்கால்களிலும் எரிச்சல் காணும். இதோடு வாலிபர் பருவத்திற்குப் பொருந்தாத ஓர் சோர்வும் காணும். இவைசரீரத் தில் உதிக்கும் ஓர் விபத்திற்கு அறிகுறிகள். தமிழ் வைத்யர் களும ஆயுர்வேத வைத்யர்களும் இந்நிலைமையை அஸ்திக் காங்கை என்பர். இந் நிலைமையில் இவ் வியாதியை சீர்படுத்தவும் தடுக்க வும் சுலபம். ஆனால் ஜனங்கள் இந் நிலைமையைக் கவனிப்பதில்லை. கவனித்தாலும் அதன் காரணம் விளங்குவதில்லை. நோயாளியை பலாத்காரமாகப் படுக்கையில் வீழ்த்தாமலே அவ்வளவு கள்ளத் தனமாக இவ்வியாதி சரீரத்தில் பிரவேசிக்கின்றது. இவன் ஓர் நோயாளி யென ஜனங்கள் நினைப்பதற்கு வேண்டியவளவு இவன் தாபலமாவதில்லை. ஆகவே எந்தக்காரணத்தினாலாவது இவன் தகுந்த சிகித்சையில் அக்கரை யடைவதில்லை. இவனைச் சூழ்ந் திருக்கும் வியாதிக்குரிய காரணங்களும் அலக்ஷியம் செய்யப்படு கின்றன. பல மாதங்கள் விருதாவாகக் கழிகின்றன. நிஷ்பலமாக திரவியமும் சிலவழிக்கப் படுகின்றது. தகுந்த விவேக மிருந்தால் இந்த ஆரம்பத் தொந்திரவுகள் இருந்திரா.

இவ்விதம் காங்கை ஆரம்பிப்பது இவ்வியாதியின் முதல் அடையாளம். பிறகு க்ஷய மென்ற இவ்வியாதி காணுவது இரண் டாவது நிலைமையெனலாம். முன் சொன்னவிதம் உடம்பு மெலிய ஆரம்பித்த சிலகாலத்திற்குப் பிறகு இலேசான வரட்டு இருமல்

2/0170

ஆரம்பிக்கும். அது ஒவ்வொருநாளும் தொடர்ந்துவரும். சில சமயங்களில் மழை, வாடை, முதலிய கால தோஷங்களால் அதிகரிக்கும். அல்லது சரீர சக்திக்கு மீறிய வேலைகளாலும் அந்த இருமல் அதிகரிக்கலாம். அதிகக் காய்ச்சல், உடம்பு இளைத்தல், ரக்தம் துப்புதல், ஆகிய இந்த சம்பூர்ண லக்ஷணங்கள் நிறைந்து காணப்படில் இவ்வியாதி சரீரத்தில் வேரூன்றி விட்டதாக நினைக்கப்பட வேண்டும். அப்பொழுது சாமர்த்தியம் மாத்திரமின்றி அதிக காலமும் அதிகப் பிரயத்னமும் சிகித்சைக்கு வேண்டியனவாகும். இவை இவ்வியாதியின் இரண்டாவது நிலைமையெனலாம். மூன்றாவதாக, கழுத்திலுள்ள கண்டங்கள் (glands) பெருக்க ஆரம்பிக்கும். அல்லது தொடையிடுக்குகளிலுள்ள கண்டங்கள் பெருக்க ஆரம்பிக்கும். இதை கண்டங்களில் காணும் க்ஷயரோகம் (Tuberculosis of the glands) என்பர். இவ்வியாதியை ஆரம்பத்திலே நிதானித்து உடனே சிகித்சை செய்யவேண்டும். ஆனால் சாதாரணமாக ஜனங்கள் இந்நோயை ஆரம்பத்தில் லக்ஷியம் செய்வதில்லை. இவ்வியாதி முற்றிக் காய்ச்சல் வகையறு உண்டாக வேண்டும். அல்லது அந்த கண்டங்கள் பழுத்துத்தானாக உடைவதோ அல்லது சஸ்திர சிகித்சை செய்ய சந்தர்ப்பம் நேரிடவோ வேண்டும். அப்பொழுதுதான் அதில் கவனம் செலுத்துகின்றனர்.

இந்த க்ஷய நோயில் இன்னும் பலவகைகள் இருக்கின்றன. அவற்றுள் அஸ்திகளில் காணும் க்ஷயநோய் என்பது ஒன்று. இது பலபேர்களுக்குக் காணவிட்டாலும் நமது தேசத்தில் வியாபகமடைந்ததாகவே இருக்கின்றது. இது துர்பலமான சிறுவர்களுக்குக் காணுகின்றது. இது எலும்புகளில் காணும் ஓர் வீக்கமாக இருக்கலாம். அல்லது புண் உடைந்து வெகு நாளாக ஆறிவிடாமல் புண்ணாகவே இருக்கலாம். இவை சரீரத்தில் வியாபகமாகவிருக்கும் க்ஷய நோய்க்கு அடையாளங்களே. போதிய வெளிச்சமின்மையும், சரீரபோஷணைக் குறைவும், நல்ல காற்றுக் குறைவும், அகால போஜனமும், தகுதியற்ற போஜனமும், ஆகிய இவைகள் ஓரளவு அதிக மூளை வேலையுடன் சேர்ந்து இந்த க்ஷய நோய்க்குக்

காரணங்கள் எனலாம். பகல் முழுவதும் சூரியகிரணங்கள் உடம்பில்பட வயல்களில் வேலை செய்து வருபவர்களுக்கு விசேஷித்து இந்நோய் காணுவதில்லை. ஆனால் சூரியகிரணம் உடம்பில் படாமல் வீட்டிற்குள் இருந்து கொண்டு கதவை மூடிக் கொண்டிருப்பவர்களுக்கும் வயிற்றுப் பிழைப்புக்காகத் திறந்த வெளிகளில் போய் வேலை செய்ய வேண்டிய அவசியமில்லாத தனிகர்களுக்கும், மூளை வேலை செய்பவர்களுக்கும் இவ்வியாதி சீக்கிரமாகவும் சுலபமாகவும் காணுகின்றது. ஆகவே நிறைய சூரிய வெளிச்சமும், ஏராளமான சுத்தக்காற்றும், திறந்த வெளிகளில் வேலைசெய்வதும், சரீரத்திற்கேற்ற புஷ்டியான ஆகாரமும், ஆகிய இவைகளிருந்தால் இவ்வியாதி உடம்பில் வேரூன்ற விடாமல் தடுக்கலாம். ஆனால் இவ்வியாதி வந்துவிட்டால் உடனே வைத்தியரிடம் சிகித்சைபெற வேண்டும். அரை குறையாக வைத்யம் செய்வதில் பலனில்லை பூர்ண சிகித்சை பெற்றால்தான் பலன் உண்டு. வைத்திய சிகித்சை க்ஷய ஆஸ்பத்திரி சிகித்சை, சுகாதாரஸ்தலங்கள், ஆகிய இவைகள் இங்கு அவசியமாகின்றன.

**க்ஷய நோய்க்குச் சிகித்சை:—** இவ்வியாதிக்குத் தகுந்த மருந்து கிடையாது. இவ்வியாதி சரீரத்தில் தாக்காமல் பந்தோபஸ்து செய்து கொள்வதுதான் மருந்து. ஆகவே இவ்வியாதியை நம் தேசத்திலிருந்து அறவே ஒழித்துவிட வைத்யர்களும் சமூக சீர்திருத்தக்காரர்களும் செய்ய வேண்டிய வேலை யென்னவெனில் இவ் வியாதியை வரவொட்டாமல் செய்யவும் வியாதியை எதிர்க்கும் சக்தியை விருத்தி செய்யவுமே முழுப் பிரயத்தினத்தையும் உபயோகிக்க வேண்டும். இவ் வியாதியைப் பற்றி 16—9—38-ல் டாக்டர் கேசவ பாய் அவர்கள் கூறியதின் சாரமாவது:— “ஏராளமானபால், காய்கறிகள், கைக்குத்து அரிசி, ஆகிய இவைகள்கிடைக்குமாகில் க்ஷயவியாதியை வெல்லக்கூடும். எனெனில் இவ்வியாதி போஷணைக் குறைவால் உண்டாகிறது. நாம் மூச்சுக் காற்றை சுவாசிக்கும்பொழுது காற்றுடன் க்ஷய நோய்ப் பூச்சிகளை ஏராளமாக உட் கொள்ளுகின்றோம். ஆகாரம் முதலியவைகளாலும் அப் பூச்சிகள் நம் சரீரத்தில் சேருகின்றன. இவ்வித மிருந்தும்

பலருக்கு க்ஷய ரோய் காணுவதில்லை. ஏனெனில் இப் பூச்சிகள் கழுத்து, வயிறு, மார்பு, ஆகிய இவ்விடங்களில் தங்கும் பொழுது சரீர இயற்கை அப் பூச்சிகளை எதிர்க்கின்றது. அனேகமாக நூற்றுக்கு இருவர் நீங்கலாக மற்றவர்களை அப் பூச்சிகள் பீடிப்ப தில்லை. சரீரத்துள் தங்கியிருக்கும் அப் பூச்சிகள் வெகுகாலம் கழித்தே ரோயையுண்டு பண்ணுகின்றன. குழந்தைகள் மூன்று வது வயது முடிவதற்குள் இவ் வியாதிக்கு மிகவும் இலக்காகின் றன. அந்த வயதிற்குப் பிறகு அப் பூச்சிகளை உதறி விட்டால் பிறகு 15 வயது வரையில் அப்பூச்சிகளின் ஹிம்சைகாணுவதில்லை. ஒரு மனிதன் வாழ் நாளில் 15 வயதிற்கு மேல் 35 வயதிற்குள் ளாக இவ் வியாதியால் ஏற்படும் மரண விகிதம் மிகவும் அதிக மாக விருக்கின்றது. ஏனெனில் அக்காலங்களில் அவ்வயதுகளை யொட்டி சரீரத்தில் பல மாறுதல் ஏற்படுவதால் அம் மாறுதல் களால் அக்காலங்களில் இவ்வியாதி அதிகம் தாக்குகின்றது. 35 வயதிற்குப் பிறகு ஜனங்கள் இவ் வியாதிக்கு அதிகம் இலக்காகு வது கிடையாது. வெளி தேசங்களில் இவ் வியாதியின் வியாப கத்தை நாம் ஆராய்ந்தால் நல்ல ஆகார புஷ்டியுள்ள தேசங்களில் இவ்வியாதியின் வியாபகம் குறைந்திருப்பதைக் காணலாம். ஆனால் இந்தியாவிலோ வெனில் இவ்வியாதி தாண்டவ மாடுகிறது. இந் தியாவில் மிகவும் ஆகாரக் குறைவுதான் அதற்குக் காரணம், இந்தி யாவில் பலவிடங்களில் பலவிதமான ஆகாரம் உட் கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வித ஆகாரங்களை யொட்டியே இவ் வியாதியால் உண்டாகும் மரணவிகிதமும் பலவிதமாக இருக்கின்றது. சென்னை மாகாணத்தைப் பொறுத்தமட்டில் இவ்வியாதியின் காரணமென்ன வெனில் "அரிசியும், ரஸமும்," என நான் சொல்லுவேன். மேற்கு கடற்கரை யோரமுள்ள பாகங்களில் இவ்வியாதியின் வியாபகம் அதிகமாக விருக்கின்றது. ஏனெனில் அப் பிரதேசங்களில் வசிப் பவர்கள் பெரும் பாலும் அரிசியையே முக்கிய உணவாகக் கொள் ளுகின்றனர். ஆனால் சென்னை வாசிகளுக்கு இந்நோய் குறைந்த வளவில் காணுவதற்குக் காரணம் அவர்கள் இட்லியும், தயிரும் உட்கொள்வதே. (இட்லியும் தயிரும் நல்ல உணவு என்பது இவர் கருத்து. ப. ர்.) இட்லியும் தயிரும் ஆகார வர்க்கத்தில் நிரம்பச்

சேர்ந்தால் இந்நோயின் கொடிய பேதமாகிய எலும்புருக்கி நோய் காணுவதில்லை. நல்ல புஷ்டியான உணவுதான் இதில் முக்கியம். மேல் நாடுகளில் பள்ளிகளில் படிக்கும் சிறுவர்களுக்குப் படிக்கும் நேரங்களில் பாலை அதிகப்படியான ஆகாரமாகக் கொடுக்கப்படுவதால் அச் சிறுவர்கள் ஆச்சரியப்படும் முறையில் மிகவும் ஆரோக்ய முள்ளவர்களாக விருப்பதை நாம் கவனிக்க வேண்டும். இவ் வியதியின் உண்மையான சிகித்சை யென்ன வெனில் வரவொட்டாமல் தடுத்தலே. எல்லா வியாதிகளையும்விட இவ்வியாதியை நாம் சுலபமாகக் குணப்படுத்தலாம். இந்த உண்மையை நாம் தெரிந்து கொள்ளாமல் போனதற்குக் காரணம் நமது அவிவேகமே. எப்படி யெனில் இவ் வியாதியை ஆரம்பத்திலேயே தெரிந்து கொள்வதற்குப் போதிய வசதி இருந்தால் க்ஷய வியாதியின் வியாபகமே இராது."

இவ்விதம் சென்னையில் பிரபலமான இரண்டு நிபுணர்களுடைய அபிப்பிராயங்களை வெளியிட்டதால் மற்றவர்களுடைய அபிப்பிராயங்களும் ஒரேமாதிரியாக விருப்பதால் தனித் தனி அபிப்பிராயங்களை எழுதுவது வியர்த்தமெனக் கருதி இதோடு நிறுத்துகிறோம். இதுவரையில் காட்டியுள்ள ஆங்கில வைத்யர்களுடைய அபிப்பிராயப்படி அடியில் கண்ட விஷயங்கள் ஏற்படுகின்றன. 1. இவ்வியாதிக்குக் காரணம் சுகாதாரக் குறைவு, நல்ல காற்றுக் குறைவு ஆகாரக் குறைவு முதலியவைகள், 2. இவ்வியாதி சற்று முற்றினால் சௌக்கிய மாகாது, 3. சுகாதார இடங்கள் (Sanitorium) 4. தங்கத்தை ஊசியால்குத்தி சரீரத்தில் செலுத்துதல் இவை முக்கிய சிகித்சை இந் நான்கு விஷயங்களில் ஆயுர்வேதம் கூறுவதையும் கவனிப்போம். 1. ஆங்கில வைத்தியத்தில் சொல்லப்படும் காரணங்கள் எல்லா வியாதிகளுக்கும் பொதுவாகச் சொல்லப்பட வேண்டியவைகளே. இவைகளை க்ஷய வியாதியின் காரணமாக மாத்திரம் சொல்லுவது பொருந்தாது. சுகாதாரக் குறைவு, ஆகாரக்குறைவு, காற்றுக் குறைவு, ஜன நெருக்கம், தூசி, புகை என்பன போன்ற காரணங்கள் காய்ச்சல், காலரா, முதலிய சகல வியாதிகளுக்கும் காரணமாக ஆங்கில வைத்யர்களும் சுதேச

வைத்யர்களும் அபிப்பிராயப் படுவதால் ஆயுர்வேதத்தில் சொல்லப்படும் நான்கு காரணங்களே இவ்வியாதிக்கு முக்கிய காரணங்களென்பது அனுபவத்திற்கும் பொருத்தமானது. (அதன் விவரத்தை 8-வது பக்கம் பார்க்கவும்.) இனி இரண்டாவது விஷயத்தைக் கவனிப்போம். ஆயுர்வேதம் மற்ற வியாதிகளைப் போலவே இந்த க்ஷய வியாதியையும் விவரித் திருக்கின்றதேயன்றி இவ்வியாதி பிறவியிலேயே அசாத்தியமெனக் கூறவில்லை. உலகத்தில் எல்லா வியாதிகளாலும் மரணம் சம்பவிப்பது இயல்பு அவ்விதமே இந் நோயாலும் மரணம் நேரலாம் என்பது சாஸ்திர அபிப்பிராயம். அஷ்டாங்க ஸங்கிரஹம் சூத்திரஸ்தானம் 13-வது அத்தியாயத்தில் "நாகபலாப்யாஸ: க்ஷய க்ஷதக்னானாம்" என்று சொல்லப்பட்டிருப்பதால் இவ்வியாதி ஓர் சாமான்ய வியாதியாகவே கருதப் பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் "பரம் தினஸஹஸ்ரம் து யதி ஜீவதி மானவ:" இந் நோயாளி உயிருடனிருந்தால் ஆயிரம் நாள் தான் ஜிவித்திருக்கக் கூடும் என்று இந்த வசனம் பாவப்பிரகாசம் என்ற நூலில் காணப்படுகிறது. சில வியாக்யானங்களிலும் இந்த வசனம் எடுக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே க்ஷய வியாதியில் 1000 நாட்களுக்குப் பிறகு மரணம் நிச்சயமென சாஸ்திரம் கூறுவதாகச் சிலர் நினைக்கக்கூடும். அது சரியல்ல, ஆனால் இவ்வசனத்திற்குப் பொருள் என்னவெனில் எல்லா வியாதிகளுக்கும் நிலைமை நான்கு விதமாக சாஸ்திரங்களில் கூறப்படுகிறது. அதாவது சாத்திய மென்பது முதல் நிலைமை. இந் நிலைமையில் எல்லா வியாதிகளையும் சுலபமாக சிகித்சை செய்யலாம். கிருச்ர சாத்திய மென்பது இரண்டாவது நிலைமை. அதாவது அதே வியாதி சில நாட்களாக சரீரத்தில் வியாபித்து முற்றி விட்டால் அது கிருச்ரசாத்தியம். சிரமப்பட்டு உயர்ந்த மருந்துகளை அதிக காலம் உபயோகித்து சௌக்கியப் படுத்த வேண்டும். யாப்ய மென்பது மூன்றுவது நிலைமை. அதாவது அதே வியாதி முற்றி சில லக்ஷணங்களுடன் காணப்படில் அதை தத்கால சாந்தியாக சில மருந்துகளால் தணிக்கலாம். அதைப் பூர்ணமாகக் குணப்படுத்த முடியாது. அசாத்ய மென்பது நான்காவது நிலைமை. அதாவது அதே வியாதி இன்னும் முற்றின லக்ஷணங்களுடன் காணப்படில்

மருந்துகளுக்கு வசமாகாதென்பதே. புகழை விரும்பும் வைத்தியன் அசாத்திய நிலைமையை யடைந்த [illegible]ரோகத்தை ஏற்கக் கூடாதென்பது பெரியோர் துணிபு. இந்த வசனமும் மூன்றாவது நிலைமையில் வாழ்நாளைக் குறிக்க வந்ததே யல்லாது இந் நோய் வாய்ப்பட்டவர் அனைவருமே 1000 நாட்களுக்குப் பிறகு ஜீவ தசையுடன் இருக்க முடியாதென்பதைக் குறிக்க வந்ததல்ல. அஷ்டாங்க ஹிருதயம் முதலிய நூல்களில் இந்நோயின் சாத்தியா சாத்திய நிலையை விவரிக்குமிடங்களில் "லிங்கேஷ்வல்பேஷ்வபி க்ஷீணம் வ்யாத் யௌஷத பலாக்ஷமம்! வர்ஜயேத், ஸாதயேதேவ ஸர்வேஷ்வபி ததோந்யதா" !! இதன் பொருள்—க்ஷய நோய்களில் அந்நோய்க் குறிகள் அல்பமாகக் கண்டிருந்த போதிலும் சரீரம் மிக மெலிவடைந்தாலும் அல்லது மருந்து, நோய், இவைகளின் வேகத்தைத்தாங்கச் சக்தியற்றிருந்தாலும் அந்நோய்குணமாகாது. அவ்விதமில்லாவிடில் இந் நோய்கள் குணமாகும். இவ்விதம் நம் முன்னோர்கள் இந் நோயை மற்ற நோய்களைப் போலவே மதித்திருந்தார்களென்பது வெளிப்படை. இனி மூன்றாவது விஷயத்தைக் கவனிப்போம். சுகாதார இடங்கள் என்பது எல்லா வியாதிகளுக்கும் பொதுவானது. சுகாதார இடங்களாலேயே இவ்வியாதியைத் தணித்துவிடலாமென்பது மூட நம்பிக்கை. சுகாதார இடங்களில் வசித்துவரும் பல பெரிய செல்வவான்கள் குடும்பங்களிலும் இந்நோய்ப் பலரைக் கொள்ளை கொண்டு போவதைப் பலகாலும் கவனித்திருக்கின்றோம். ஆரம்பகாலத்தில் இந்நோய்க்கும் சாதாரணமான காச நோய் (Bronchitis) ஆஸ்த்மா ஆகிய நோய்களுக்கும் பேதம் கண்டு பிடிப்பது வெகு கடினமாக விருக்கிறதென்பதை அனுபவத்தில் அறிகிறோம். காசநோய், ஆஸ்த்மா ஆகிய இவைகளை க்ஷய நோயாக நினைத்து சுகாதார இடங்களில் சில காலம் வசிப்பதால் அவ்வியாதி குணமாவதைப் பலர் க்ஷய வியாதி குணமானதாக நினைத்திருக்கின்றனர். தகுந்த மருந்தில்லாமல் இவ்வியாதி எவ்வளவு சுகாதாரங்களாலும் குணப்படுவதில்லை. சுகாதாரம் முதலியவைகள் மருந்துக்கு ஒத்தாசை புரிகின்றன. அவ்வளவேயின்றி சுகாதாரங்கள் தனித்து மருந்தாக ஆவதில்லை. இனி நான்காவது விஷயத்தைக் கவனிப்போம். சுவர்ண பஸ்மம் இவ்

வியாதியில் சுதேச வைத்யர்கள் வெகு காலமாக உபயோகித்து வருவது உலகமறிந்ததே. இந்த சுவர்ணம் ஆங்கிலத்தில் Sanocrysin (ஸேனோக் ரைஸின்) என்ற பெயருடன் சமீப காலத்தில் தயாரிக்கப்பட்டு இந்நோயில் ஊசியால் குத்தி ரக்தத்தில் செலுத்தப் படுகின்றது. இம்மருந்தைப் பற்றி ஆங்கில வைத்ய நூல்கள் கூறுவதாவது:—

This is a gold salt which is given intravenously. The initial dose should be small, 0·025 gram. and if there is no reaction this is increased by intervals of 5 to 7 days in the following doses: 0·05 gram, 0·1 gram, 0·25 gram, 0·5 gram, 0·75 gram and 1 gram. Reactions include: Fever, nausea, vomiting, and diarrhoea. Albuminuria. Headache or meningeal symptoms. Cutaneous rashes and stomatitis. Enlargement of glands. If sanocrysin cannot be tolerated or if the veins are difficult, allochrysin can he injected intramuscularly. Injections of sodium morrhuate may also be tried. If the injections produce an aggravation of the signs of activity they should be discontinued. இந்த ஆங்கிலத்தின் பொருள்—ஸேனோக் ரைஸின் என்ற தங்க உப்பு அசுத்த ரக்தக் குழாய் மூலமாக சரீரத்தில் ஊசியால் குத்தி ரக்தத்தில் செலுத்தப்பட வேண்டும். இந்த மருந்தை ஆரம்பத்தில் சுவல்ப அளவில் ஆரம்பிக்க வேண்டும். அதாவது 0·025 கிராம் என்ற அளவில் ஆரம்பிக்க வேண்டும். இதில் வேறு வியாதிகள் உண்டாகா விட்டால் அப்பொழுது 5 அல்லது 7 நாட்கள் கழித்து மேற்படி அளவை அடியில் காணுமாறு அதிகப்படுத்தலாம். 0·05 கிராம், 0·1 கிராம், 0·25 கிராம், 0·5 கிராம், 0·75 கிராம், 1 கிராம் என்ற வரிசைப்படி அதிகப்படுத்தலாம். (கிராம் என்பது 15 கிரைன்சு கொண்டது.) இம்மருந்தை உபயோகித்தால் உண்டாகும் வியாதிகளாவன—காய்ச்சல், வாந்தி. ஓக்காளம், பேதி, மூத்திரக் குண்டிக்காய் நோய், தலைவலி, மூளைக் கொதிப்பால் உண்டாகும் நோய்கள், சரீரத்தில் தடிப்புகள், பலவகையான

வாய்ப் புண்கள், கண்டமாலை போன்ற நோய்கள். ஸேநோக்ரைஸின் என்ற மருந்தை நோயாளி தாங்க முடியா விட்டாலும், அல்லது அசுத்த ரக்தக் குழாய்களைப் பிடிப்பது கஷ்டமாக விருந்தாலும் அப்பொழுது அல்லோக்ரைஸின் என்ற மருந்தை மாமிச தசைகள் மூலமாக ஊசியால் குத்தி ரக்தத்தில் பீச்சலாம். சோடியம் மோரேட் (இது காட்ஸ்லீவர் ஆயிலிலிருந்து தயார் செய்யப்படும் ஓர் உப்பு) என்பதையும் ஊசியால் பீச்சிடலாம். முன் சொன்ன ஊசி மருந்துகள் வியாதியின் அபிவிருத்தி சின்னங்களை அதிகப்படுத்தினால் மருந்துகளை நிறுத்திவிடவேண்டும். குறிப்பு—இந்த ஸேநோக்ரைஸின் என்ற மருந்தைக் கண்டுபிடித்தவர் Moellgaard (மூலகார்ட்)என்பவர். இம்மருந்தைப்பற்றி மற்றொரு நிபுணர் கூறுவதாவது:—The determination of a specific for tuberculosis, just is available for syphylis, malaria, or amoebic dysentry is engaging the attention ... The treatment of tuberculosis by the application of vaccines has yielded only discouraging results. In spite of a lot of work turned out to check the spread of this foul desease, a specific is yet to be discovered. A critical study of the efficacy of the various preparations tried till now by this department reveals that the gold compounds are the best though they are not specific. இதன் பொருள்—மேக வியாதி, மலேரியா, ரக்தக் கடுப்பு, ஆகிய இவ்வியாதிகளில் நமக்குக் கிடைத்துள்ள மருந்துகளைப் போல க்ஷய நோய்க்கு ஓர் தகுந்த மருந்தைக் கண்டு பிடிப்பதில் கவனம் மிகவும்...செலுத்தப்பட்டு வருகிறது. அம்மைப்பால் போன்ற பால்களை இந்த க்ஷய நோய்க்கு உபயோகித்துப் பார்த்ததில் அவை விபரீத பலத்தையே கொடுத்தன. இக்கொள்ளை நோயின் வியாபகத்தைத் தடுக்க எவ்வளவோ பிரயத்தினங்கள் செய்தும் இதற்குத் தகுந்த மருந்து இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. இதுவரையில் இந்நோய்க்காகக் கண்டுபிடிக்கப்பட்ட பலவிதமான மருந்து வகைகளின் குணங்களை யறிய இந்நோயில் உபயோகித்துக் கூர்ந்து கவனித்ததில் எல்லா மருந்து

களைக் காட்டில் சுவர்ண சம்பந்தமான மருந்துகளே (வியாதிக்குரிய மருந்தாகாவிட்டாலும்) நல்ல மருந்துகளாகத் தெரிகின்றன.

இதுவரையில் நாம் காட்டியுள்ள நிபுணர்களின் அபிப்பிராயங்களையும் அனுபவத்தையும் கவனிக்கும்பொழுது க்ஷய வியாதியில் ஆங்கில மருந்துகள் பயனற்றவை யென நன்கு விளங்குகின்றது. இனி ஆயுர்வேதக் கொள்கைப்படி இந் நோயை கவனித்தால் அடியில்கண்ட விஷயம் விளங்குகின்றது:—

இந்நோயின் காரணங்கள் நான்கென கீழே குறிப்பிட்டோம். அதன் அடையாளங்கள்—ஆரம்பத்தில் சிலகாலம் அஸ்திக்காங்கை (இது பலவிதமாக விருக்கும்) பிறகு வரட்டு இருமல், பல க்ஷயம் ஆகிய இவைகள். இதன் சிகித்சை—இவ்வியாதியில் A. C. கவிரத்ன அவர்கள் சொன்ன 20 மருந்துகளும் மற்றும் பல மருந்துகளும் சுதேச வைத்யர்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் உண்மையில் இவ்வியாதியில் அவைகள் specific என்ற உரிய மருந்துகள் ஆவதில்லை. ச்யவனப் பிராசம் போன்றவைகள் இவ்வியாதியில் ஓரளவு நன்மையைக் கொடுத்த போதிலும் அவைகளால் வியாதி நிவர்த்தியாவதில்லை. மற்ற ஆஸவங்கள், அரிஷ்டங்கள் முதலியன இவ்வியாதியில் ஓரளவு உபசாந்தியை யளிக்கின்றன. இந்த மருந்துகளால் வியாதி பூர்ணமாகக் குணமாவதில்லை யென்பது எல்லா வைத்யர்களும் அறிந்ததே. நாங்கள் அனுபவித்தவரையில் இவ்வியாதியில் specific ஆக அடியில்கண்ட மருந்துகளைக் கூசாமல் கையாடலாம்.

**தாளக பஸ்மம்:**— தாளகத்தைச் சுத்தி செய்து அப்படியே உபயோகித்தால் அதில் பூர்ணபலம் கிடைப்பதில்லை. சாஸ்திரங்களில் (தமிழிலும் வடமொழியிலும்) தாளகம் ஒன்றைத்தான் இவ்வியாதியில் உயர்ந்த மருந்தாக மெச்சப்படுகின்றது. ஆகவே அதைப் பச்சையாக உபயோகிக்காமல் பஸ்மம்செய்து உபயோகித்தால் மிகுந்த நன்மை காணுகின்றது. பஸ்ம முறைகள் பல வகையாக இருக்கின்றன. ஆனால் அதில் ஒரு வகைதான் குணம் மிகுந்து கொடுக்கின்றது. தாளக பஸ்மம் உறுதியாக க்ஷயப் பூச்

சிகளைக் கொல்லுகின்றது. வியாதியை அறவே ஒழித்து நோயாளிக்குப் பூர்ண சுகத்தை யளிக்கின்றது.

**சுவர்ணமாக்ஷிக பஸ்மம்:**—இதற்குத் தென்மொழியில் பெயர் கிடையாது. விமலா என்று வட மொழியில் சொல்லப்படும் ஓர் வஸ்துவை நிமிளை எனத் தமிழில் வழங்குகின்றனர். நிமிளைக்கும் சுவர்ண மாக்ஷிகத்திற்கும் பேதம் கண்டுபிடிப்பது சற்று கடினம். உண்மையான ஸ்வர்ண மாக்ஷிகத்தை யறிந்து சுத்தி செய்து பஸ்மம் செய்து உபயோகித்தால் இவ்வியாதியில் நன்மைசெய்வதுடன் சரீரத்தையும் பலப்படுத்தும்.

**வைக்ராந்த பஸ்மம்:**— வைக்கிராந்த மென்பதற்குத் தமிழில் பெயர் சொல்லப்படவில்லை. இதைச் சுத்தி செய்து பஸ்மம் செய்து உபயோகித்தால் க்ஷய வியாதியில் குணம் செய்வதுடன் சரீரத்தையும் பலப்படுத்தும்.

கீழ்ச்சொன்ன மூன்று பஸ்மங்களும் சாஸ்திரப் பிரசித்தமானவை. இவைகளில் தாளக பஸ்மம் ½ கிரெயின், வைக்ராந்த பஸ்மம் 1 கிரெயின், ஸ்வர்ணமாக்ஷிக பஸ்மம் 3 கிரெயின்சு, (ஒரு கிரெயின் என்பது இரண்டு குன்றிமணி யிடை) எடுத்து ஒன்று சேர்த்துக் காலையிலும்சாயங்காலத்திலும் தேனில் குழைத்துச்சாப்பிடவும். 10 நாட்களிலிருந்து 15 நாட்களுள் இவ் வியாதியைக் கண்டித்து வியக்தமாகக் குணங்களைக் காட்டுகின்றது. இந்த மூன்று பஸ்மங்களையும் சேர்த்துக் கொடுக்காவிட்டால் நல்லகுணம் கொடுப்பதில்லை. மற்ற முத்து பவழம் முதலியவைகள் நிதானமாகச் சரீரத்தில் குணம் கொடுக்கின்றதே யன்றி முன் சொன்ன பஸ்மங்களைப் போல வேகமாகக் குணம் கொடுப்பதில்லை. வியாதி மிகவும் முற்றினநிலைமையிலும் இப்பஸ்மங்கள் நோயைத்தணித்து விடுமென நம்பியிருக்கலாம். முற்றின நிலைமைகளில் ஹிருதயம் துர்பலமாக விருப்பதால் அதை யொட்டி மரணம் சம்பவித்தாலும் கூட காய்ச்சல் முதலியவைகளைப் பூர்ணமாகக் குணமாக்குகின்றது. இந்த மூன்று பஸ்மங்களுடன் ஸ்வர்ண பஸ்மமும் சேர்த்துக் கொடுத்தால் மிகவும் குணம் கொடுக்கு மென்பதில் சந்தேகமில்லை.

**நாக பலா:—** இது ஹிமாலயத்தில் உண்டாகும் ஓர் செடி. சுமார் 2, அல்லது 3 அடி உயரம் இருக்கும். இச் செடியின் வேரைப் பொடி செய்து அரை ரூபாயிடைத் தேனில் குழைத்துக் காலை சாயங்காலம் ஆக இரு வேளைகளில் உபயோகிக்க இவ் வியாதி குணமாகும். இச்செடி தென்னாட்டில் கண்டுபிடிக்க முடியவில்லை. மலையாளத்தில் ஏதோ ஓர் செடியை நாகபலா என்கிறார்கள். அது பொருத்தமாகவில்லை. அஷ்டாங்க ஸங்கிரஹத்தில் நாகபலா என்பது க்ஷய நோய்க்கும் க்ஷத நோய்க்கும் உரிய மருந்து (specific) எனச் சொல்லப்பட்டிருக்கின்றது. இச் செடியின் தனி வேர் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே நாம் வெகுகாலமாக சமூலமாகவே இதை உபயோகித்து வந்திருக்கிறோம். முன் சொன்ன பஸ்மங்களைத் தேனில் குழைத்துச் சாப்பிட்டு உடனே இந்தப் பொடியையும் முன் சொன்னபடி அனுபானமாக உபயோகிப்பது நம் வாடிக்கை. இந்த நாகபலாவைப்பற்றி நமது நூல்கள் சிலாகித்துக் கூறுவது மாத்திரமின்றி இதை ஆங்கிலர்களும் உபயோகித்துப் பார்த்து அதன் குணத்தை மெச்சுகின்றனர். 1939 மேமாதம் 31வ கராச்சியிலுள்ள C. S. O, Neill (நீல்) என்ற ஆங்கிலேயர் A Himalayan herb for Tuberculosis (க்ஷய நோய்க்கு ஓர் ஹிமாலய மூலிகை) என்ற தலையங்கத்தில் எழுதியுள்ளார். "நலியாதா என்ற ஹிந்துஸ்தானியில் பெயர் கொண்ட நாகபலா என்ற மூலிகையை க்ஷயவியாதியில் ஷை ஆங்கிலேயர் உபயோகித்து வருகிறார். சென்ற சில வருஷங்களாக இந்தியா மூலிகைகளில் இவர் ஆராய்ச்சி நடத்திவருகிறார். அவர் சொல்லுவதாவது:—

"Quite satisfactory results were obtained in cancer by the use of **Nagabala**. I need not reiterate the many virtues of this herb as extolled by the various Sanskrit, Arabic, and other works, including the famous vaidic on Ayurvedic work 'Susrutha'. As a result of my research on it and by few of others a I have able to discover remarkable properties in it for inhibiting the growth and eliminating tubercle bacilli from the system. It has conferred immunity in

certain cases, and has been found to control temperature, cough, haemoptysis in a number of other cases. I think it would prove uncommonly useful in driving out tuber-cnlosis from the country side. Now that the Anti-Tuberculosis Campaign has been launched throughout India, it would be really helpful if the authorities concerned were to shake off their prejudice against all that is unknown to the British Pharma copoeia, and try it for themselves. I do not claim it as a panacea for all ills, but there is no doubt about its effectiveness in fighting against tuberculosis.''

இதன் பொருள்— நாகபலாவை உபயோகித்துப் புத்து என்ற வியாதியில் மிகவும் திருப்திகரமான குணம் அனுபவத்தில் கண்டேன். பல ஆயுர்வேத கிரந்தங்கள், சுச்ருதம், அராபி வைத்ய நூல்கள் ஆகிய இவைகளில் இந்த நாகபலாவைப் பற்றிச் சொல்லியுள்ள பெருமைகளை இங்கு நான் திருப்பித்திருப்பிக் கூறுவதில் விசேஷமில்லை. நானும் இன்னும் பலரும் நாகபலாவை ஆராய்ச்சி செய்தோம். அதன் பலனைக க்ஷய நோயாளியின் சரீரத்திலுள்ள க்ஷயப் பூச்சிகளை அப்புறப் படுத்துவதிலும் போஷணையை வளர்ப்பதிலும் நாகபலாவுக்குள்ள ஆச்சரியமாயும் அபூர்வமுமான குணங்களைக் கண்டேன். சில க்ஷய நோய்களில் பூர்ணமாகக் குணம் காணப்பட்டது. காய்ச்சல், இருமல், ரக்தம் துப்புதல் ஆகிய இவைகளை பல க்ஷய நோய்களில் இது குணப்படுத்தியது. நம் நாட்டிலிருந்து க்ஷய நோயை விரட்ட இது மிகவும் உபயோகமுள்ளதென நான் நினைக்கின்றேன். தற்காலம் இந்தியா முழுவதும் க்ஷய நோயைத் தடுக்கப் பிரயத்தினம் செய்யப்படுகின்றது. அதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆங்கில வைத்ய நூல்களுக்குத் தெரியாத மருந்துகளில் தங்களுக்கு இருக்கும் மாத்சர்யத்தைவிட்டு தாங்களாகவே இந்த நாகபலாவைப் பரீக்ஷித்துப் பார்ப்பது நலமென நான் கருதுகிறேன். நாகபலாவை எல்லா வியாதிகளுக்கும் ஓர் அமிர்தமென நான் கூறவில்லை. க்ஷய வியாதியைத் தடுப்பதில் இது ஓர் ஒப்புயர்வற்ற மூலிகை யென்பதில்

சந்தேகமில்லை. இவர் அனுபவம் முழுவதும் மிகச் சரியென நாம் உறுதியாகக் கூறுவோம். ஆனால் நாம் முன் சொன்னபடி தாளகம், ஸ்வர்ணமாக்ஷிகம், வைக்ராந்தம் ஆகிய இவைகள் நாகபலாவைவிட மிகவும் உயர்ந்தவைகள். மூலிகைகளில் நாகபலாவுக்குச் சமான மானது வேறு கிடையாதென்பது நிச்சயம். ஆகவே நாம் முன் சொன்னபடி இவையனைத்தையும் சேர்த்து உபயோகிப்பது நலம். மேலும் இதே ஆங்கிலேயர் 1939ஹு ஜனவரிமீ 29உ பத்திரிகைகளில் எழுதுவதாது—Nagabala with other herbs have since been used extensively by T. B. sanatoria and eminent medical men on tubercular patients with success. But on further examination it has been found to be more assimilable if it is used by 1. C. C. dose as injections. இதன் பொருள்—க்ஷய வியாதிக்காக ஏற்படுத்தப்பட்ட சுகாதார ஸ்தலங்களாலும் பல பிரபல வைத்யர்களாலும் நாகபலா என்ற மூலிகையும் மற்ற மூலிகைகளும் விஸ்தாரமாக க்ஷயநோய்களில் உபயோகிக்கப்பட்டு நல்ல குணம் அனுபவிக்கப்பட்டிருக்கிறது. நான்மேலும் பரிசீலனைசெய்ததில் நாகபலாவை திரவசத்தாகச் செய்து 1. C. C. என்ற அளவில் ஊசியால் குத்தி ரக்தத்தில் செலுத்தப்பட்டால் அது சரீரத்தில் நன்றாகப் பற்றி குணம் கொடுக்கின்றது. இவ்விதம் இந்த ஆங்கிலேயருடைய அனுபவமும் நாகபலாவின் மேன்மையை நன்கு விளக்குகின்றது. இதில் சொல்லியுள்ள மருந்துகளின் மற்ற விவரங்களும் பஸ்மசிந்தூரங்கள் செய் பாகங்களும் நம்முடைய ஔஷதசாரத்திலும், சித்தர் முறையிலும் காண்க. ஆகவே கீழ்ச்சொன்ன விவரங்களால் சுதேச நூல்களை யனுசரித்து க்ஷயநோய் குணமாகக் கூடியதென்றும் மற்ற மருந்துகள் இலேசாக குணம் கொடுப்பவைகளென்றும் தாளக பஸ்மம் ஒன்றுதான் வியாதிக்குரிய மருந்தென்றும் (specific) அதோடு சுவர்ணமாக்ஷிக பஸ்மமும் வைக்ராந்த பஸ்மம் சேர்த்துக் கொடுக்கவேண்டுமென்றும் நாகபலாவை அனுபானமாகச் சேர்ப்பது மிகவும் நல்லதென்றும் சுவர்ண பஸ்மமும் முன் சொன்னவைகளுடன் சேர்க்கலாமென்றும் இவை இவ்வியாதியில் நல்லகுணம் கொடுப்பதாக அனுபவத்தில் அறியப்பட்டிருக்கிறதென்றும் வியக்தமாகிறது.

படும் பலங்களும் படிகளும் இந்தரீதியில் கவனிக்கப்படவேண்டும். வடமொழி அளவுகளின் கிரமத்தை அடியிலுள்ள குறிப்பின்படி கவனித்துக்கொள்ளவேண்டும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| குன்றுமணி | 1 | = | ரக்தி 1 | | | |
| ரக்தி | 10 | = | மாஷம் 1 | | | |
| மாஷம் | 4 | = | சாணம் 1 | = | இது தத்கால ரூபாயில் கால்ரூபாயிடை | |
| சாணம் | 2 | = | கோலம் 1 | | | |
| கோலம் | 2 | = | கர்ஷம் 1 | = | இது தத்கால ரூபாயில் ஒரு ரூபாயிடை | |
| கர்ஷம் | 2 | = | சுக்தி 1 | | | |
| சுக்தி | 2 | = | பலம் 1 | = | இது தத்கால ரூபாயில்நான்கு ரூபாயிடை | |
| பலம் | 2 | = | பிரசிருதம் 1 | | | |
| பிரசிருதம் | 2 | = | குடவம் 1 | | | |
| குடவம் | 2 | = | சராவம் 1 | | | |
| சராவம் | 2 | = | படி 1 | = | இது தத்கால பெரிய படியில் அரைப்படி. | |

வெல்லத்திற்குப் பதிலாக நாட்டுச்சர்க்கரையை உபயோகிக்கலாம் வெல்லத்தை உபயோகிப்பதானால் நன்ருக இடித்துப் பொடி செய்து கஷாயத்தில் போட்டு நன்ருகக்கலக்கிக் கரைந்து போகும் படி செய்யவேண்டும். கரைந்து போகாவிட்டால் சர்க்கரை அடியில் அப்படியே தங்கிவிடும். மருந்து கெட்டுப்போகும். ஒரு மாதம் கழித்து மேல்மூடியைத்திறந்து பார்த்தால் கஷாயத்தின் மேல் ஓர் ஆடையிருக்கும். அதைகலேக்காமல் ஒதுக்கித்தெளிவாகக் கஷாயத்தை நன்ருக வடிகட்டி எடுத்துக் கொள்ளவும். அவ்விதம் வடிகட்டும் போது கஷாயம் தானுக இறங்க வேண்டும். அவ்விதமின்றித் துணியைப் பிசைந்து வடிகட்டினுல் பிறகு சீசாவில் வண்டல் படியும். அவ்வித மின்றி சுத்தமாக இருக்க வேண்டு

மானல் நிதானமாகத் துணியில் தானக கஷாயம் இறங்கும்படி விட வேண்டும். வடிகட்டும் பாத்திரம் ஜாடியாக இருக்கவேண்டும். அல்லது மண் பாத்திரத்தை வைத்துக் கொள்ளலாம். மற்ற லோக பாத்திரம் எதுவும் கூடாது. இந்த அரிஷ்டத்தைத் தனியாகவும் அல்லது பஸ்மம், சிந்தூரம், மாத்திரை, இவைகளுக்கு அனுபானமாகவும் கொடுக்கலாம். இந்த மருந்து பைஷஜ்ய ரத்நாவளியில் சொல்லப்பட்டுள்ளது. பங்காள வைத்யர்கள் முக்கியமாக இந்த அமிருதாரிஷ்டத்தை உபயோகிக்கின்றனர். எல்லாக் காய்ச்சல் களிலும் தாராளமாக உபயோகிக்கலாம். குழந்தைகளுக்குக் குறைந்த அளவில் கொடுக்கலாம்.

9. யோகநாத ரசம்:—ரசம், கந்தகம், துத்தம், மனோசிலை, வத்ஸநாபிக் கிழங்கு, ஸ்வர்ண மாக்ஷிகம், வெள்ளைப் பாஷாணம், லிங்கம், அப்பிரகம், அயம், தாமிரம், இவைகளைச் சமயிடையாக எடுத்து புங்கம்பட்டைச் சார், நொச்சியிலைச் சார், கையாந்தகரை (கரிப்பான்) இவைகளால் வரிசைக்கிரமமாக அரைத்து உளுந்துப் பிரமாணம் உருண்டை செய்து நிழலில் உலர்த்தி சீசாவில் பத்திரப்படுத்திக் கொள்ளவும். தகுந்த அனுபானத்தில் வேளைக்கு 1 மாத்திரை கொடுக்கவும். டைபாய்டு, ஜன்னி, முதலிய கடுங் காய்ச்சல் நிவர்த்தியாகும். குறிப்பு:— ஸ்வர்ணமாக்ஷிகம், அப்பிரகம், அயம், தாமிரம், ஆகிய இந்நான்கு சரக்குகளையும் பஸ்மம் செய்து கொள்ள வேண்டும். மற்றவைகளைச் சுத்தி செய்து கொள்ளவும். முதலில் ரசத்தையும் கந்தகத்தையும் கல்வத்திலிட்டு மர்த்தித்துக்கொண்டு பிறகு மற்ற சரக்குகளையும் சேர்த்து நன்ருகப் பொடி செய்து கொண்டு பிறகு வரிசைப்படி சார்களை விட்டு அரைத்துக் கொள்ளவும். மனோசிலையையும் வெள்ளைப் பாஷாணத்தையும் பஸ்மம் செய்து சேர்த்தால் மிகவும் நல்லது. டைபாயிட், ஜன்னி ஆகிய இவைகளில் இது உயர்ந்த மருந்து. அனுபானம்—முன் சொன்ன கஷாயங்கள், அமிருதாரிஷ்டம், தேன், ஆகிய இவைகளில் ஏதாவது ஒன்று. இஞ்சி ரசம் ஓர் அனுபானம். பஸ்ம சிந்தூர முறைகளைச் சித்தர்முறை என்ற நமது புஸ்தகத்தில் காண்க.

10. பஞ்சவக்திர ரசம்:— சுத்தம் செய்த ரஸம், வத்ஸ நாபிக் கிழங்கு, கந்தகம், மிளகு, வெங்காரம், திப்பிலி, இவைகளைச் சம எடையாக எடுத்துக் கல்வத்திலிட்டு நன்றாகப் பொடி செய்து ஊமத்தையிலைச் சாற்றால் ஒரு நாள் அரைத்து குன்றுமணியள வாக உருட்டி வெய்யிலில் காயவைத்துச் சீசாவில் பத்திரப் படுத் திக் கொள்ளவும். எருக்கம்வேர் (காய்ந்தது) கஷாயத்தில் மிளகு பொடி சேர்த்து இந்த அனுபானத்தில் வேளைக்கு 1 மாத்திரை உபயோகிக்கவும். காய்ச்சல், ஜன்னி, இவைகளில் குணம்செய்யும்.

11. மகாகாலாக்னிருத்ர ரசம்:— லிங்கம், தாளகம், ரசம், மனோ சிலை, வெங்காரம், கந்தகம், இவைகளை வகைக்குத் தோலா 1 நாபிக்கிழங்கு தோலா 6, வெள்ளைப் பாஷாண்ம் தோலா 36, இவை களைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழரசத்தால் நான்கு ஜாமம் அரைத்து சிறிய கடுகளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி சீசாவில் பத்திரப் படுத்தவும். மூன்று நாட்களுக்கு அதிகம் உப யோகிக்கக் கூடாது. வேளைக்கு 1 மாத்திரை தகுந்த அனுபானத் துடன் கொடுக்கவும். ஜன்னி விலகும். குறிப்பு — தாளகம், மனோ சிலை, வெள்ளைப் பாஷாணம் இவைகளை பஸ்மமாக செய்து கொள் ளுவது நல்லது. மற்றவைகளைச் சுத்தி செய்து கொண்டு கல்வத் தில் முதலில் ரசத்தையும் கந்தகத்தையும் சேர்த்து நன்றாகப் பொடி செய்து கொண்டு பிறகு மற்றவைகளைச் சேர்த்துக் கைவி டாமல் நான்கு ஜாமம் அதாவது 12 மணி அரைக்கவும். இம் மருந்து மிகவும் கடுமையானது. ஜாக்கிரதையாக உபயோகிக்க வேண்டும். 2 அல்லது மூன்றுநாட்கள் சரீரபலத்தை யனுசரித்து உபயோகிக்கவும். முன் சொன்ன கஷாங்களை அனுபானமாகக் கொள்ளலாம். ஒரு தினத்தில் ஒரே வேளை சாப்பிடவும்.

12. சன்னிபாத தாவா நலரசம்:— தாளகம், கருவங்கம், வெள்வங் கம், ரசம், வெங்காரம், யவக்ஷாரம், சத்திக்ஷாரம், சீனிக்காரம், இந் துப்பு, பிடாலவணம், சௌவர்சலவணம், கந்தக உப்பு, சமுத்திர உப்பு, வெள்ளைப் பாஷாணம், கௌரி பாஷாணம், மனோசிலை,

210170
சென்னை-600 003.



இவைகளைச் சமயிடையாக எடுத்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழ ரசத்தால் அரைத்து வெய்யிலில் நன்ருக உலர்த்திப் பிறகு ஓர் காசிக் குப்பியில் போட்டுச் சீலமண் செய்து வாலுகாயந்திரத்தில் காடாக்னியாக 24 மணி நேரம் எரித்து ஆறின பிறகு எடுத்து சீசாவில் இருக்கும் மருந்தைக் கல்வத்தில் கொட்டி நன்ருகப் பொடிசெய்து பிறகு மயில், வெள்ளாடு, பாம்பு, இவைகளின் பிச்சுகளால் பாவனை செய்து பிறகு உலர்த்தி சீசாவில் பத்திரப்படுத்திக் கொள்ளவும். உளுந்தளவு ஒரு வேளைக்கு உபயோகிக்கவும். அனுபானம் கஷாயம் முதலியவை. குறிப்பு:— கருவங்கம் வெள் வங்கம் இவை யிரண்டும் பஸ்மமாக எடுத்துக்கொள்ள வேண்டும். உப்புகள்5, க்ஷாரம்3, வெங்காரம்1, ஆக இந்த 9, சரக்குகள் நீங்கலாக மற்றவைகளைச் சுத்தி செய்து கொள்ளவும். இவ்விடத்தில் தாளகமும் மனேசிலையும் பஸ்மமாக சேர்க்க வேண்டிய அவசியமில்லை. சத்திச்சாரம் என்பது சோடா வுப்பு. பிடாலவணமும் சௌவர்ச லவணமும் வடதேசத் திலிருந்து வரவழைத்துக் கொள்ள வேண்டும். காசிக்குப்பி கிடைக்காவிட்டால் அதிகபருமனில்லாத இலேசான வெள்ளை நிற சீசாவை எடுத்துக்கொள்ளவும். சீசாவில் பாதியளவுக்கு மருந்து போட வேண்டும். அதாவது மருந்து சீசாவில் போட்ட பிறகு மேல்பாதி சீசா காலியாக இருக்க வேண்டும். உள்ளிருக்கும் மருந்துகளும் உப்பும் கரைந்து பிறகு பஸ்மமாக வேண்டியிருப்பதால் அதற்குப் போதிய காலி இடம் வேண்டியது அவசியம். சீசாவின் வாய்க்குப் பொருந்தும்படி ஓர் மாக்கல்லைத் தயாரித்து சீசாவின் வாயில் மாக்கல்லைப் பொருத்தவும். அவ்விதம் பொருந்துவதற்கு ஓர்பசைவேண்டியது அவசியம். உளுந்த மாவைக் கொஞ்சம் ஜலம்விட்டுப் பிசைந்து பசை செய்து கொண்டு அந்தப்பசையை சீசாவின் வாய்பக்கங்களில் தடவி மேல் மாக்கல்லைப் பொருத்தவும். சீசாவின் வாய்க்குச் சீலமண் செய்து பிறகு சீசா முழுவதற்கும் ஏழு சீலமண் செய்து வெய்யிலில் நன்ருகக் காயவைக்கவும். பிறகு ஓர் பானையில் நான்கு விரல் உயரம் கிறுமணல் கொட்டி அதில் அந்த சீசாவைச் சாயாமல் நிறுத்திப்

## வைத்தியச் செய்திகள்.

---

## சுதேச வைத்திய ஸபை, மதுரை.

---

ஷெ சபையின் ஆதரவில் நாளது 1939ஹு பிப்ரவரிமீ 19உ ஞாயிற்றுக்கிழமை மாலை 5-மணிக்கு மதுரை காக்காத்தோப்புத் தெருவிலிருக்கும் சூரியநாராயண சாஸ்திரியார் பாடசாலையில் ஸ்ரீமான் M. K. சங்கரராமய்யர் அவர்கள், B. A., B. L., முன்ஸிபல் கௌன்சிலர் தலைமையில் சுதேச வைத்தியர்களின், ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அச்சமயம் ஸ்ரீமான் டாக்டர் S. வன்னியக் கோனார் அவர்கள் 'சுதேச வைத்தியம்' என்ற விஷயத்தைப்பற்றி விரிவாக உபன்யசித்தார்கள். மற்றும் பலரும் ஷெ விஷயத்தைப் பற்றிப் பேசினார்கள். வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிவு பெற்றது.

T. S. சுப்ரமண்யம்.
காரியதரிசி.
சுதேச வைத்திய சபை, மதுரை.

Registered No. M.

# வைத்திய சந்திரிகா.

ஆயுர்வேத சாஸ்திரத்தின் உண்மைப் பெருமையையும்
அதன் ஆராய்ச்சியினால் மனித சமூகத்திற்கு ஏற்படக்கூடிய பிர
யோஜனத்தையும் தெளிவாக எடுத்து விளக்குவதற்கே ந
மாஸிகை வெளிவருகிறது. ஆயுர்வேத சாஸ்திரத்தில் பூர்ண ப
டித்தியம் வாய்ந்த எமது ஆசிரியரும், மற்றும் பழைய முறை
பயிற்சியுடையவர்களும் எழுதிவரும் விஷயங்கள் பண்டிதருக்கு
பாமரருக்கும் நல்ல விருந்தாக அமையும்.

வைத்திய சாஸ்திரத்தில் முக்கியமான பல புஸ்தகங்களி
மொழி பெயர்ப்பு நல்ல நடையில் வெளி வரும். வியாதிகளின் க
ணம், குணம், சிகித்சை முதலியவைகளை மூடுமந்திர மில்லாம
"வைத்திய சந்திரிகா" பிரதி மாதமும் தாங்கிவருவாள், வைத்தி
முறைகளில் பயிற்சிபெற விரும்பும் மாணவர்களுக்கு ஒரு வைத்தி
கலாசாலையைப்போல் நமது "சந்திரிகா" உதவுவாள்.

சந்திரிகையின் ஒவ்வொரு சஞ்சிகையிலும் கடைசி பாக
தில் **வைத்தியசாரம்** என்றும் **ஔஷதசாரம்** என்றும் **ஸஹஸ்ரயோக**
என்றும் மூன்று தனிப்புஸ்தகங்கள் தொடர்ச்சியாக வெளி வரு
ஒவ்வொரு வியாதியின் லக்ஷணம், காரணம், அவற்றின் சிகித்ஸ
முதலியன விரிவாக **வைத்திய சாரத்தில்** எழுதப்படும். சரகம், சுச
தம் அஷ்டாங்கஹிருதயம், அஷ்டாங்கசங்கிரஹம், பாவப்பிரகாச
சார்ங்கதரம் பதினெண் சித்தர்கள்' இருபத்தேழு சித்தர்கள் (
லியவைகளிலிருந்து பலதடவை அநுபவத்தில் குணம்கண்டறி
பஸ்மம், சிந்தூரம், லேகியம், கஷாயம் முதலியன **ஔஷத சாரத்**
தெளிவாக செய்முறையுடன் சொல்லப்படும். மலையாளதேசத்
பிரசித்தமான **ஸஹஸ்ர** யோகமென்ற நூலைத் தமிழில் மொ
பெயர்த்து விரிவான செய்முறைகளுடனும் உபயோகிக்கும் வி
களுடனும் கூறப்படும். சுதேச முறைகளை நன்கு தெரிந்துகொ
விரும்புவர்களுக்கு இது ஓர் இன்றியமையாத சாதனமாகும்.

மானேஜர்,
"வைத்திய சந்திரிகா" மது

கிடைக்குமிடங்கள்:—

**பண்டிட் S. நாராயண அய்யங்கார்.**
2, நிர். போலீஸ் ஸ்டேஷன் மேல்புரம் சந்து, மதுரை.

---

ஆயுர்வேத வைத்தியர், **T. S. சுப்ரமண்யம்.**
35, நிர். காக்காத் தோப்புத் தெரு, மதுரை.